விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 17 வியாழக்கிழமை (02.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

## ஆபத்தான புதிய வைரஸ் பிறழ்வு

# இலங்கைக்குள் நுழையும் அபாயம்




### விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த எச்சரிக்கை

*(கொழும்பு)* தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வைரஸ் பிறழ்வு நாட்டுக்குள் நுழையக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நயினை தாயின் மகோற்சவம் இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் 15

## மாந்தை கிழக்கில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட கரும்புள்ளியான் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மதியம் 15

## யாழ்.மாவட்டத்தில் நேற்றும் 321 தொற்றாளர்கள் அடையாளம்

### முடக்கத்திலும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 321 கோவிட்-19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அன்டிஜன் சோதனைகளில் 270 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். 15

## கொரோனாவால் யாழ்.குடாநாட்டில் 8 பேர் உயிரிழப்பு



### அபாயத்தை நோக்கி யாழ்ப்பாணம்

*(யாழ்ப்பாணம்)*
கொரோனாத் தொற்றால் யாழ்.மாவட்டத்தில் மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ். மாவட்டத்தில் நாளுக்குநாள் கொரோனாவால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.
கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 32 15

## கொரோனா +3,828

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் 3,828 பேருக்கு கொரோனாத் தொற்று 15

## நாட்டில் மேலும் 215 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் கோவிட் தொற்றால் மேலும் 215 பேர் உயிரிழந்துள்ளனர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக் 15

## புளியங்குளம் ஏ9 வீதியில் மோ.சைக்கிள் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(புளியங்குளம்)
புளியங்குளம் பொலிஸ் பிரிவில் கண்டி - யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் 201 கிலோ மீற்றர் தூணுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணத்தை 15

## பொருளாதாரம், கோவிட்டை வெற்றி கொள்ள அதிகபட்ச உதவிகள் வழங்கப்படும்

### இலங்கைக்கு சீனா உறுதி



(கொழும்பு)
இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா சவாலை சமாளிக்கத் தன்னாலான இயன்ற உதவியை வழங்கத் தயாராக இருப்பதாக சீனா உறுதியளித்துள்ளது.
சீனாவின் உயர்மட்ட சட்டமன்ற உறுப்பினர் லி ஜான்ஷுவுக்கும் இலங்கையின் சபாநாயகர் 15

## ஊரடங்கு வேளை மருதனார்மடம் சந்தியில் வாள்வெட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் சந்தியில் நேற்றிரவு 7 மணியளவில் வன்முறைக்கும்பல் ஒன்றினால் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அதனால் நேற்றிரவு அந்தப்பகுதியில் 15

## எந்தவொரு தடுப்பூசிக்கும் கட்டுப்படாத புதிய வைரஸ் திரிபு

(கொழும்பு)
எந்தவொரு தடுப்பூசியினாலும் கட்டுப்படுத்த முடியாத கோவிட் திரிபொன்று உலகளா 15

## கோவிட் தொற்றால் வவுனியாவில் 6 பேர் பலி

### 237 பேருக்கு தொற்று உறுதி

(வவுனியா)
கோவிட் தொற்றால் வவுனியாவில் மேலும் 6 பேர் உயிரிழந்ததுடன் நேற்றும் 237 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
கோவிட் தொற்றுக் காரணமாக சிகிச்சை 15

# வடமராட்சி அம்பன் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று புதன்கிழமை அம்பன் பகுதியில் வீடு ஒன்றில் கழிப்பறைக்கு குழி தோண்டும் போது வெடிபொருட்கள் சில தென்பட்டுள்ளன.

இதனையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டு பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து விசேட அதிரடிப் படையின் உதவியுடன் அப்பகுதி தோண்டப்பட்ட போது கிளைமோர் குண்டுகள் 4, ஆர்பிஜி குண்டுகள் 6, கைக்குண்டுகள் 38, கிளைமோர் சுவிட்ச் 6 என்பன மீட்கப்பட்டுள்ளன. (ம-60)

# அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த அதிகபட்ச நடவடிக்கைகளை எடுத்துவருவதாக நுகர்வோர்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அரிசிவிலை உயர்வுக்கு ஒரு காரணமாக நெல் விலை அதிகரிப்பு உள்ளது. குறிப்பாக இடைத்தரகர்கள் நெல்லைப் பதுக்கி வைத்து, சந்தையில் பற்றாக்குறையை உருவாக்கி அதை அதிக விலைக்கு விற்றுவருகின்றனர்.

கடந்த வாரத்தில் வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்படாத நெல் களஞ்சியசாலைகளைக் கண்டுபிடிக்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் பதிவு செய்யப்படாத 52 நெற் களஞ்சியங்களில் 8,000 மெட்ரிக் தொன் நெல் பதுக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டு அவற்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் கம்பஹா - சீதுவ பகுதியில் பதுக்கப்பட்டிருந்த கிட்டத்தட்ட 5,400 மெட்ரிக் தொன் சீனி கண்டறியப்பட்டு சீல் வைக்கப்பட்டது எனவும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண கூறினார்.

அத்துடன், பெல்வத்த மற்றும் செவனகலை சீனி உற்பத்தி ஆலைகளில் இருந்து சதொச மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு அடுத்த புதன்கிழமை பிறவுண் சீனியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அடுத்த புதன்கிழமை முதல் ஒரு கிலோ சீனியை 130 ரூபாய்க்கு நுகர்வோர் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# யாழ். போதனாவில் குழந்தை பிரசவித்த பெண் கோவிட்டால் 10 நாட்களின் பின் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட நிறைமாதக் கர்ப்பவதிப் பெண், குழந்தை பிரசவித்து 10 நாட்களின் பின் சிகிச்சைபலனின்றி உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

பிறந்த குழந்தைக்கு கோவிட்-19 தொற்று உள்ள நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த சண்முகராசா பிரியதர்ஷினி (வயது - 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக கர்ப்பவதிப் பெண் சேர்க்கப்பட்டார். அவருக்கு கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு கடந்த பத்து நாட்களுக்கு முன் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தைக்கும் கோவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் தாய் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கடந்த 26ஆம் திகதி மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி தாயார் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பெண்ணின் சடலத்தை சுகாதார முறைப்படி தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. (ம-33)






# புதிய வைரஸ் பரவினால் மரணங்களின் எண்ணிக்கை 3 மடங்காக உயர்வடையும்

(கொழும்பு)

நாட்டில் வேகமாக பரவிக்கொண்டுள்ள டெல்டா வைரஸின் தாக்கத்தினால் கடந்த மாதத்தில் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தென்னாபிரிக்க வைரஸ் இலங்கையில் பரவும் நிலை ஏற்பட்டால் இந்த எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரிக்கும் அபாய நிலை உள்ளதாகவும் சுகாதார, வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இந்நிலையில் இதுவரை நாட்டின் கோவிட் தாக்கங்கள் மற்றும் எதிர்கால சவால்கள் குறித்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுரபல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று மருத்துவப்பிரிவின்பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர கூறுகையில்,

"சி.1.2" என்ற தென்னாபிரிக்க வைரஸ் மற்றும் "மூ" என்ற கொலம்பிய வைரஸ் ஆகியவை தற்போது பாவனையில் உள்ள தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாதவை எனக் கூறப்படுகின்றது.

எனவே இலங்கையில் இந்த வைரஸ்களில் ஏதேனும் ஒன்றேனும் பரவினால் தற்போது பதிவாகும் கோவிட் மரணங்களைவிட மூன்று மடங்கு மரணங்கள் நாட்டில் ஏற்படும் அபாயநிலை எம்மெதிரே உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சமூக மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி இது குறித்து கூறுகையில்,

நாம் புதிய வைரஸ் தொற்றுக்குள் சிக்கிக்கொண்டால், புதிய வைரஸ் பரவலுக்கு இடமளித்தால் கோவிட் மரணங்களால் எண்ணிக்கை இந்த ஆண்டுக்குள் 30 ஆயிரத்தை அண்மிக்கலாம். எனவே இந்த அச்சுறுத்தல் நிலைமையை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

இது குறித்து இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன கூறுகையில்,

கடந்த ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி நாட்டின் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 4,508 ஆகக் காணப்பட்டது. செப்டெம்பர் 1 ஆம் திகதி இந்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தைக் கடந்துள்ளது.

அப்படியென்றால் இந்த ஒரு மாதத்தில் 50 வீதத்தால் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது நாட்டின் மிகப்பெரிய அச்சுறுத்தல் நிலைமையை வெளிப்படுத்துகின்றது.

இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த மாதத்தில் மரண எண்ணிக்கை நூறுக்கு முந்நூறு என்ற ரீதியில் அதிகரிக்கும். இது நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை மட்டுமல்லாது பொருளாதாரத்தையும் வெகுவாகப் பாதிக்கும் என்றார். (ம)







## தொற்றாளர் எண்ணிக்கை குறைவடையவில்லை

# மேலும் இரு வாரங்கள் நாட்டை முடக்குங்கள்

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள முடக்கல் நிலையை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.**

கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கையில் போதியளவு வீழ்ச்சி ஏற்படாத காரணத்தினால் முடக்கல் நிலையை மேலும் இரண்டு வாரங்களுக்கு விதிப்பது அவசியம்.

நாளாந்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 5,000 ஆக கண்டறியப்பட்டாலும், சமூகத்தில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 50,000 நபர்கள் இருக்கலாம் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

டெல்டா கொரோனா வைரஸ் மாறுபாடு கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து சமூகத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எனவே வைரஸ் தொற்றுகளின் அளவை கட்டுப்படுத்த கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-5)

## அரசாங்கத்தில் இருந்து விலகுவது தொடர்பாக தீர்மானிக்கவில்லை

### முன்னாள் ஜனாதிபதி விளக்கம்



(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகுவது குறித்து இதுவரை எந்தவொரு தீர்மானத்தினையும் மேற்கொள்ளவில்லை என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவிற்காக பொலநறுவையில் குருதி நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அரசாங்கத்தில் இருந்து விலகுவது தொடர்பாக இதுவரையில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

அவ்வாறு வெளியிடப்படும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானதாகும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# பைஸரை விட மொடர்னா சிறந்தது

### ஆய்வில் தகவல்




(கொழும்பு)

**பைஸர் தடுப்பூசியின் ஊடாக கிடைக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை விட, இரண்டு மடங்குக்கு மேலான நோய் எதிர்ப்பு சக்தியை மொடர்னா தடுப்பூசி வழங்குவதாக ஸ்ரீ ஜெயவர்தன புர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு ஒவ்வாமை பிரிவின் பிரதானி வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**

பெல்ஜியத்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றிலேயே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார். (நி-5)

## வைரஸ் தொற்றின் நோய்க்காவிகள் பொது மக்களே

### பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், மரண எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் நோய்க்காவிகள் பொதுமக்களே. எனவே, பொதுமக்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மதிக்க வேண்டும். பொதுமக்கள் வெளியில் நடமாடாது இருந்தால் மட்டுமே இந்தத் தொற்றுப் பரவல் முடிவுக்கு வரும்."

என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பொதுமக்களே ஏதேனும் அத்தியாவசிய தேவைகள் இருந்தால் மட்டும் வீடுகளிலிருந்து வெளியேறுங்கள். இதன்போது வீதிச்சோதனைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு நீங்கள் பயணிப்பதற்கான காரணத்தைக் கூற வேண்டியது அவசியம்.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பயணிப்பவர்களும் உள்ளனர். எனவே, இவ்வாறானவர்களை இனங்காண்பதற்காகப் பொலிஸார் பல கேள்விகளைக் கேட்பர்.



எனவே, அதற்கான ஒத்துழைப்பைப் பொலிஸாருக்கு வழங்கிச் செயற்படுமாறு வடக்கு - கிழக்கு மக்களைக் கோருகின்றேன்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# ஐ.நா.மனித உரிமைப் பேரவையை எதிர்கொள்ளத் தயாராகிறது இலங்கை



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு, ஐ.நா. பொதுச் சபை அமர்வு ஆகியன இம்மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கை தனது நிலைப்பாடுகளை இலங்கை வதிவிடப் பிரதிநிதிகள் ஊடாக தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது எனநேற்று முன்தினம் கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். இலங்கைக்கு எதிராக மீது ஒவ்வொரு வருடமும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டுக்களுக்குப் பின்னால் உண்மையிலேயே மனித உரிமை மீறல் பற்றிய கரிசனை உள்ளதா? அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரல் உள்ளதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர் செப்டெம்பர் -12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் முதல் நாளிலேயே இலங்கையில் போர்க்குற்றம் மற்றும் பொறுப்புகூறல் குறித்த வாய்மொழி அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் முன்வைக்கவுள்ளார். தொடர்ந்து இது குறித்துப் பதிலளிக்க இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செப்டம்பர் 21-ஆம் திகதிஐ.நா. பொதுச் சபை அமர்வு நியூயோர்க் நகரில் கூடுகின்றது.

இந்நிலையில் இவ்விரண்டு மாநாடுகளிலும் இலங்கைக்குச் சார்பான தீர்மானங்களைப் பெற எதிர்பார்க்கின்றோம் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# சுபோதினி குழு அறிக்கையை முழுமையாக ஏற்கமுடியாது

### அதிபர், ஆசிரியர் சம்பளம் குறித்து அரசாங்கம் விளக்கம்

(கொழும்பு)

**ஆசிரியர்- அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் விதமாக கல்வி அமைச்சு மட்டத்தில் தயாரிக்கப்பட்ட சுபோதினி குழு அறிக்கையை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது.**

**சுபோதினி அறிக்கையினை செயற்படுத்துவதாயின் ஒரு மாதத்திற்கு மேலதிகமாக 71 பில்லியன் நிதி ஆசிரியர்- அதிபர் சேவைக்கு சம்பளம் வழங்க ஒதுக்க வேண்டும்.**

**அரசாங்கம் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் சுபோதினி குழு அறிக்கையை செயற்படுத்துவது சாத்தியமற்றது.**

**அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகள் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்படும் என சுற்றாடற்துறை அமைச்சரும், அமைச்சரவை உபகுழுவின் உறுப்பினருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

**அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று புதன் கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி-5)**

# தயார் நிலையில் இங்கிலாந்து

## ஜோரூட் அறிவிப்பு



இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் இன்று தொடங்குகிறது. இதையொட்டி இங்கிலாந்து கப்டன் ஜோ ரூட் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது:

இந்திய கப்டன் விராட் கோலி உலகத்தரம் வாய்ந்த பட்ஸ்மேன் என்பதில் சந்தேகமில்லை. இந்த தொடரில் அவரை பெரிய அளவில் ரன் எடுக்க விடாமல் ஆட்டம் இழக்கச் செய்த வகையில் எல்லா பெருமையும் எங்களது பந்து வீச்சாளர்களையே சாரும். இப்போது அவரை அவுட் ஆக்கும் வழிமுறையை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அடுத்து வரும் போட்டிகளிலும் இதே முயற்சியில் அவருக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வீழ்த்தவேண்டும். அப்போது தான் தொடரை வெல்ல முடியும்.

அடுத்த டெஸ்டில் இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது. அவர் உலகத்தரம் வாய்ந்த வீரர். எங்களுக்கு எதிராக விக்கெட் வீழ்த்தியது மட்டுமின்றி, ரன்களும் எடுத்துள்ளார். டெஸ்டில் அவரது திறமை என்ன என்பதை நாங்கள் அறிவோம். அதற்கு ஏற்ப நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அஷ்வினால் டெஸ்ட் போட்டிகளில் எவ்வளவு சிறப்பாக விளையாட முடியும் என்பதும் எங்களுக்கு தெரியும். அவரது பந்துவீச்சை எதிர்கொள்ளவும் நாங்கள் தயாராகவே உள்ளோம். போட்டியின் போது யார் பந்துவீசினாலும் அவர்களின் பந்துவீச்சை சமாளித்து ரன் குவிப்பது மட்டும் தான் எங்களது வேலை, அதை சரியாக செய்வோம் என்ற நம்பிக்கை உள்ளது என தெரிவித்தார். (4-6)




# ஓய்வு பெற்றது ‘ வேகப் புயல் ’

கிரிக்கெட் அரங்கில் ‘வேகப் புயல்’ என வர்ணிக்கப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீசாளர் டேல் ஸ்டெயின், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுப் பெற்றுள்ளார்.

140 கி.மீட்டர் வேகத்திற்கு மேல் பந்து வீசி, அதை ஸ்விங் செய்யும் வல்லமை கொண்ட 38 வயதான ஸ்டெயின், நேற்று முன்தினம் தனது ஓய்வு அறிவிப்பினை வெளியிட்டார்.

தனது ஓய்வு குறித்து ஸ்டெயின் கூறுகையில், ‘கடந்த 20 வருடங்களாகப் பல்வேறு கிரிக்கெட் அனுபவங்களை எதிர்கொண்டுள்ளேன். பல நினைவுகள் உள்ளன. பலருக்கும் நன்றி சொல்லியாக வேண்டும். இன்று அதிகார பூர்வமாக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறேன். மகத்தான பயணம். அனைவருக்கும் நன்றி என கூறினார்.

ஸ்டெயினின் ஓய்வுக்கு இன்னாள் மற்றும் முன்னாள் வீரர்கள், இரசிகர்கள் என அனைவரும் சமூக வலைத் தளங்களின் ஊடாக வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

2004 ஆம் ஆண்டு இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில், கிரிக்கெட் அறிமுகத்தை பெற்றுக்கொண்ட ஸ்டெயின் இறுதியாக 2019 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்தார்.

ஸ்டெயின் 97 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 439 விக்கெட்டுகளையும், 125 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 196 விக்கெட்டுகளையும் 47 இருபதுக்கு-20 போட்டிகளில் விளையாடி 64 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இரசிகர்களோடு ரசிகர்களாக கால்பந்தாட்ட போட்டியை கண்டு களித்த தலிபான்கள்



ஆப்கானிஸ்தானில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கால்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டியை இரசிகர்களோடு ரசிகர்களாக ஆயுதங்கள் தரித்த தலிபான்கள் போட்டியை பார்த்து இரசித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

ஏற்கனவே தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய பிறகு 19 வயதான இளம் கால்பந்தாட்ட வீரர் ஒருவர் அமெரிக்க விமானத்தில் தப்பிச் செல்ல முற்பட்டு மரணத்தை தழுவிக் கொண்டார்.

இந் நிகழ்வுக்கு பின்னர் அங்கு இடம் பெற்ற மிகப் பெரிய கால்பந்தாட்ட இந் நிகழ்வில் அந்த வீரருக்கான பிரார்த்தனைகள் மைதானத்திலேயே முன்னெடுக்கப்பட்டது.

இது மாத்திரமல்லாமல் இரசிகர்களோடு ரசிகர்களாக ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற இந்த மாபெரும் இறுதிப் போட்டியில் தலிபான்கள் போராளிகள் ஆயுதம் தரித்த வண்ணமாக போட்டியை பார்த்து இரசித்து. பரிசில்களையும் வழங்கிவைத்துள்ளனர்.

இதனுடைய புகைப் படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. (4-6)




## ஐ.பி. எல் தொடரில்

# மேலும் இரு புதிய அணிகளுக்கான விலை மனுக் கோரல்

இந்தியன் பிரீமியர் லீக்கின் புதிய அணிகளுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் 2000 கோடி இந்திய ரூபா அடிப்படை விலையை நிர்ணயித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரண்டு புதிய உரிமையாளர்களுக்கான ஏலங்களை அழைக்கும் ஒரு அறிவிப்பை வெளியிட்ட பின்னர், பி.சி.சி.ஐ. அலுவலகப் பணியாளர் கிரிக்பஸ்ஸிடம் இருப்பு விலை 2000 கோடி ரூபா என்று உறுதிசெய்தனர்.

தற்போது 8 அணிகள் பங்கேற்று வரும் நிலையில் அணிகளின் எண்ணிக்கையை 2022 ஆம் ஆண்டில் இருந்து 10 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இதையடுத்து புதிய இரு அணிகளுக்கான உரிமத்தை பெற விரும்பும் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் நேற்று முன்தினம் அழைப்பு விடுத்து டெண்டர் கோரியுள்ளது.

ஆமதாபாத், லக்னோ, புனே ஆகிய நகரங்களை அடிப்படையாக கொண்டு அணிகள் உருவாக்கப்படும் என்று தெரிகிறது.

அதானி குழுமம், ஆர்.பி.ஜி. சஞ்ஜீவ் கோயங்கா குழுமம், மருந்து நிறுவனமான டோரென்ட் உள்ளிட்டவை ஐ.பி.எல். அணிகளை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றன.

10 அணிகள் இடம் பெறும் போது ஆட்டங்களின் எண்ணிக்கை 60 இல் இருந்து 74 ஆக அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-6)

## இராசிபலன்

**02.09.2021**
**ஆவணி 17, வியாழக்கிழமை**
**ஏகாதசி முழுவதும்**
**திருவாதிரை பிற்பகல் 2.53 மணிவரை**
**சுபநேரம் 7.35-9.05 மணிவரை**
**இராகுகாலம் 1.35-3.05 மணிவரை**
**சந்திராஷ்டமம்: கேட்டை, மூலம்**

வளவன்

**மேஷம்** — உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், நீண்ட நாளைய பிரச்சனை ஒன்று நல்ல முடிவுக்கு வரலாம், செலவுகளில் சிக்கனம் காட்டும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** — உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.

**மிதுனம்** — குடும்ப செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்

**கடகம்** — தொழில் ரீதியான அலைச்சல்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் கூடும் நாள், தூரத்து உறவினர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**சிம்மம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** — அன்பு நண்பர்கள் ஆர்வத்துடன் உதவ முன்வரலாம், பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், உற்சாகமான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்** — தொழில் வளர்ச்சிக்கு குறிக்கீடாக இருந்தவர் விலகுவார், காரிய வெற்றிக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாடு குதூகலம் தரும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.

**தனுசு** — குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** — உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** — வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மீனம்** — எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், புதிய தகவல்கள் கிடைக்கலாம்.

**பயம் கொண்ட மனிதனால் பிறருக்கு உதவ இயலாது**

# பயணக்கட்டுப்பாடுகள் குறித்து அறிவியல் ரீதியாக முடிவெடுங்கள்

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் கோரிக்கை

**(கொழும்பு)**

**பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவது மற்றும் அமுல்படுத்துவது குறித்து அறிவியல் ரீதியாகவே முடிவு எடுக்க வேண்டும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நீலிகா மளவிகே தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் இடம்பெற்ற போர்களை விட இந்த கொரோனா வைரஸினால் உயிர்களுக்கும் பொருளாதாரத்திற்கும் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே கண்ணுக்குத் தெரியாத அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க ஒரு நாடு என்ற ரீதியில் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் இந்த விடயத்தில் வெளிப்புற தாக்கங்களை வைத்து முடிவுகளை எட்டாமல் அறிவியல் அடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (நி-5)

# சுய தனிமைப்படுத்தல் ஊரடங்கால் அதிகரித்துள்ள வீட்டு வன்முறைகள்

(கொழும்பு)

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள கொவிட் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக வீட்டு வன்முறை சம்பவங்கள் அதிகரித்த நிலையில் கடந்த 10 நாட்களில் (ஓகஸ்ட் 21 முதல் ஓகஸ்ட் 31 வரை) கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் 150க்கும் மேற்பட்டோர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 30 பெண்கள் தங்கள் கணவர்களால் தாக்கப்பட்டவர்கள் என்றும் அக்கம் பக்கத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக சில ஆண்கள் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.


மேலும், கடந்த 10 நாட்களில் வீட்டில் விழுந்து மற்றும் தீக்காயம் அடைந்ததால் சுமார் 100 பேர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அனைவரும் 23 முதல் 70 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## வர்த்தகர்களே பொருட்களைப் பதுக்காதீர்

# கர்மவினை சும்மாவிடாது

## தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

"50 கடிகாரங்கள் இருந்தாலும் ஒன்றைத்தான் கட்ட முடியும். அதேபோல் 20 ஆடைகள் இருந்தாலும் ஒன்றைத்தான் அணிந்துகொண்டு செல்ல முடியும். எனவே, பொருட்களைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கர்மவினை சும்மா விடாது." என எல்லே குணவங்க தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாடு பெருந்தொற்றுப் பேரலவத்துக்குள் முகம் கொடுத்துள்ளது. இவ்வாறான நெருக்கடியான சூழலில் மோசடிகளில் வர்த்தகர்கள் எவரும் ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபட்டால் உங்கள் பிள்ளை உள்ளிட்ட குடும்பங்களையும் அது பாதிக்கும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# நுகர்வுக்கு உதவாத பால்மாக்கள் 3 களஞ்சியசாலைகளுக்கு சீல்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் மனித நுகர்வுக்கு உதவாத பால்மாக்களை களஞ்சியப்படுத்தியிருந்த மூன்று களஞ்சியசாலைகளுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டத் தகவலுக்கு அமைய குறித்த பகுதியைச்சுற்றிவளைத்தஅதிகாரிகள், மூன்று களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைத்துள்ளனர்.

குறித்த களஞ்சியசாலைகளில் இருந்து புறக்கோட்டையிலுள்ள தொகை வியாபார நிலையங்களுக்குப் பால்மா பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

மொத்தமாக 1,900 கிலோ கிராம் பால்மா பைக்கற்றுக்களுடன் களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன. (நி-5)

# சட்டவிரோத பொருட்களுடன் ஒருவர் கைது

(கல்கிஸை)

கல்கிஸை பொலிஸ் பிரிவில் இரத்மலானை பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் விசேட சுற்றிவளைப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சுங்க வரி செலுத்தப்படாமல் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 30,000 சிகரட் பெட்டிகள் , 95 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் மாணிக்கக்கல் என்பவற்றுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டு கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 49 வயதுடைய சந்தேக நபர் கொழும்பு 3 பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## கொரோனாத் தொற்றுக்கு மத்தியில்

# யாழில் அதிகரிக்கும் மக்கள் நடமாட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**நாடு பூராகவும் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்தும் முகமாக அரசினால் ஊரடங்கு அமுல்படுத்தப் பட்டுள்ள நிலையில் யாழில் மக்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.**



குறிப்பாக நேற்று முன் தினம் யாழ்ப்பாண மாவட்டத் தில் 375 பேருக்கு மேற்பட் டோர் கொரோனாத் தொற்றா ளர்களாக இனங்காணப்பட்டு ள்ள நிலையில் அத்தியாவசிய தேவை தவிர்ந்த ஏனையோர் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

எனினும் அவ்வாறான அறிவுறுத்தல்களையும் மீறி பொதுமக்கள் தற்பொழுது வீதிகளில் வழமை போல நடமாடுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட நாளிலிருந்து நேற்றையதினம் வரை 2 ஆயிரம் பேர் தொற்றா ளர்களாக இனங்காணப்பட் டுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்றினைக் கட்டுப்படுத்து வதற்கு பொதுமக்களின் ஒத் துழைப்பு அவசியம் என ஏற் கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் ஊர டங்கைப் பொருட்படுத்தாது வழமை போன்று வீதிகளில் நடமாடுகின்றனர். (4-7-33)

## எழுதுமட்டுவாழ் கிராமத்திற்கான பேருந்து சேவையை மருதங்குளம் சந்திவரை விஸ்தரிக்குக

### பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுதுமட் டுவாழ் கிராமத்திற்கான பேரு ந்து சேவையினை மருதங் குளம் சந்தி வரை நீடிக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளை கோரிக்கை விடுத் துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கை யில்,

எழுதுமட்டுவாழ் கிராமத்தி ற்கான அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் தற்போது துர்க்கை அம்மன் ஆலயம் வரையே இடம்பெறு கின்றன.

இதனால் எழுதுமட்டு வாழ் கிராமத்தின் மன்னங்குறிச்சி, ஓட்டுவேலி கிராம மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் பெரிதும் சிரமப்ப டுகின்றனர்.

கடந்த காலத்தில் மருதங்கு ளம் சந்தி வரை போக்குவரத் துச் சேவையை நீடிக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையைக் கோரிய போது பாதை போக்குவரத்துக்கு ஏற்ற விதத்தில் இல்லை எனக் கார ணம் கூறப்பட்டது.

ஆனால் தற்போது வீதியும் சீரமைக்கப்பட்டுள்ள நிலையில் எழுதுமட்டுவாழ் மருதங்குளம் சந்தி வரை போக்குவரத்துச் சேவையை விஸ்தரிக்குமாறு பிரதேச மக்கள் என்னிடம் கோரியுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார். (4-7-30)

## சட்டவிரோத மணல் அகழ்வு

### ஆறு பேர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் புல னாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய தருமபுரம் பகுதியில் வெவ்வேறு இடங் களில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 6 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து மணல் அகழ்விற்குப் பயன்படுத்திய டிப்பர் வாகனங்களும் கைப்ப ற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக் காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டனர். (4-7-316)


## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணைய வழி அரங்ககதையாடல் நிகழ் வில் கதையாடல் 9 நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அர ங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வ முடையவர்களை சூம் செயலி இலக்கம் 73534935699 கட வுச்சொல் ITM ஊடாக இணை ந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழை ப்பு விடுத்துள்ளனர். (4-6)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று 21 ஆம் திருவிழா



## வாயிலிலே நின்றேனும் காண மாட்டா வறுமையினை என் சொல்வோம்!

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

உலகமெலாம் காக்கின்ற நல்லூர்க் கந்தன்
ஒப்பற்ற திருவிழவும் வந்தால் மக்கள்
நிலமதனை விண்ணாக்கி மகிழ்வர் தங்கள்
நினைவெல்லாம் கந்தனது அழகுக் காக்கி
பலபலவாய் விரதங்கள் பிடித்தே வாடிப்
பக்தியினால் நெஞ்செல்லாம் உருக நின்று
மழைறவே உயிர் வளர்த்து மாண்பு கொண்டு
மங்கலங்கள் கண்டேதான் மகிழ்ந்து நிற்பர்!

ஒப்பற்ற கந்தனது வேலைக் கண்டு
உவந்தேதான் கண்களிலே அருவி ஓட
இப்பற்று எதற்கென்று வாழ்வை நீக்க
இதயத்தால் ஒருப்பட்டே இயங்கி நிற்பர்
வெப்புற்றுப் பிளந்தேதான் வீரம் செய்த
வேலவனின் கைவேலே இதுவென்றெண்ணி
மூப்பற்றும் நீக்கிய நல் முனிவோர் போல
முருகனையே நல்லூரில் வணங்கி நிற்பர்!

ஓம் முருகா! எனும் நாமம் உலகமெல்லாம்
ஒலித்திடவே ஒன்றாகி உரத்துக் கூவி
தாம் வளர அருள் கொடுக்கும் வேலன் தன்னின்
தண்ணளியாம் கருணை நினைந்தழுது நிற்பர்
நாமமதில் முருகனவன் வடிவைக் கண்டு
நாமார்க்கும் குடியல்லோம் என்றே கூறி
சேமமுறச் செய்கின்ற அவன் தாள் பற்றி
சேவிக்கும் அன்பர்களின் பெருமை என்னே!

வள்ளியொடு தெய்வானைத் தாய்மார் சூழ
வலம் வருவான் வேல் வடிவாய் கந்தன் தானும்
நல்லவர்கள் மனம் குளிர்ந்து நடுங்கி ஐயன்
நாடரிதாம் திருவுருவின் நலங்கள் கண்டு
தள்ளரிய பெருவரத்தைப் பெற்றாற்போல
தமக்குள்ளே மெய்யுருகித் தளர்வு கொள்வார்
வெல்லரிய வேல் வடிவாய்த் தோன்றும் வேலன்
விளங்கிடவே விண்ணவரும் பணிந்து நிற்பார்!

கொடி ஏறிக் கோபுரத்தில் சேவல் ஆடக்
கொண்டாடி அடியரெலாம் குவிவார் அங்கு
அடி அளந்து பெண்களெலாம் அன்பால் விம்மி
"அரகர" என்றனுதினமும் அவனைச் சூழ்வார்
நெடிதுயர்ந்த தோள்களெலாம் மண்ணில் தோய
நெஞ்சுருகி இளையரெலாம் கந்தன் நாமம்
இடியெனவே முழங்கி அவன் வீதி தன்னில்
எப்போதும் உருளுகிற காட்சி என்னே!

அருணகிரி முனிவனிடம் தமிழாய் வந்தான்!
அற்புதமாய் அறுமுகத்தோடவனி வந்தான்!
விருத்தனென வள்ளித்தாய் முன்னே வந்தான்!
வெல்லுகிற போர்முனையில் வேலாய் வந்தான்!
பெரும் புலமை ஔவையவள் தன்னை ஏய்க்க
பேதமைசேர் இடையன் எனப் பிறழ்ந்து வந்தான்!
அருமைமிகு நல்லூரில் எம்மைக் காக்க
அற்புதமாம் ஐயனவன் அழகாய் வந்தான்!

வீதியெலாம் வெண்மணலாய் விரிந்த கூட்டம்
வினைகளற வேலனவன் தன்னைக் கூவி
ஓதி அவன் திருநாமம் உளத்தே சேர்த்து
உணர்வுருகித் தமை மறந்து உறைந்து நிற்கும்
பாதிமதி அணிந்த சிவப் பரமன் தானும்
பார் உயரத் தந்த திருமுருகன் தன்னை
நீதியொடு நினைவார்கள் நெஞ்சத்துள்ளே
நெருங்காது துன்பமதன் சாயல் தானும்

சித்தர்களை உருவாக்கிச் சிறக்கச் செய்த
சீரமைந்த நல்லூரான் வீதி தன்னில்
பத்தர்களின் கால் பட்டால் பாவம் தீரும்
பரவுகை வாழ்வதுவும் பயனாய்ச் சேரும்
நித்தமுமே நல்லூரான் வீதி சுற்றி
நினைந்தவனைப் போற்றுகிற அடியார்க்கெல்லாம்
முத்தியொடு பேரின்பம் முழைக்கும் தன்னால்
முருகனவன் பெருமைதனை என்ன சொல்ல?

ஆயிரமாய் அடியவர்கள் கண்களெல்லாம்
ஆசையுடன் பார்த்திருக்கும் அழகுக் கோலம்
கோயிலுளே அடங்கியதோ? இந்த ஆண்டு
குமரா! உன் பேர் அழகைக் குறைகள் தீர
வாயிலிலே நின்றேனும் காண மாட்டா
வறுமையினை என் சொல்வோம்! உலகை வாட்டும்
நோயதனைத் தொலைத்தேதான் மீண்டும் எங்கள்
நொந்த மனம் குளிர்ந்திடவே காட்சி நல்காய்!

# மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது நடைமுறைக்கு சாத்தியமான தீர்மானமல்ல

## மருத்துவ கலாநிதி சந்திம தெரிவிப்பு

(கொழும்பு)

**பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அனைத்து மாணவர்களுக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றுவது நடைமுறை சாத்தியமான தீர்மானம் அல்ல. பிள்ளைகளின் நோய் எதிர்ப்பு சக்தி தொடர்பில் பூரண அறிவில்லாமல் இவ்வாறான தீர்மானத்துக்கு செல்வது பொருத்தமில்லை என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீட ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் பிரதானி கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**



பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் தடுப்புசி ஏற்றுவதற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கொவிட் தொற்று நிலைமையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதாக இருந்தால், சம்பந்தப்பட்ட பிரிவு அது தொடர்பில் வழிகாட்டல் ஒன்றை அறிமுகப்படுத்தவேண்டும்.

அனைத்து மாணவர்களுக்கும் கொவிட் தடுப்புசி ஏற்றுவது நடைமுறைசாத்தியமான தீர்மானம் அல்ல என்பதே எனது நிலைப்பாடு. தடுப்புசி ஏற்றுவதற்கு முன்னர் பிள்ளைகளின் நோய் எதிர்ப்பு சக்தி தொடர்பான அறிவு அல்லது அதுதொடர்பான புரிதல் இல்லாமல் இவ்வாறான தீர்மானத்துக்கு செல்வது பொருத்தமில்லை.

அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்புசி ஏற்றுவதன் மூலம் மாணவர்களுக்க தானாகவே பாதுகாப்பு கிடைக்கப்பெறுகின்றது.

பிள்ளைகளின் நோய் எதிர்ப்புச்சக்தி இயற்கையாகவே வளர்ச்சி பெறும் முறை தொடர்பாக விரைவில் ஆய்வொன்றை மேற்கொள்ள இருக்கின்றோம். சுகாதார பிரிவினரிடமிருந்து, அது தொடர்பான தரவுகளை பெற்றுக்கொண்டே மேற்கொள்ள இருக்கிறோம்.

அத்துடன் கொவிட் தடுப்புசி ஏற்றும் வேலைத்திட்டம் நிறைவடைந்த பின்னர், எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் நாட்டில் சீரான நிலைமை ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அனைத்து வைரஸ்களுக்குமான பதில் தடுப்புசி ஏற்றுவதாகும். அதனால் தடுப்புசி ஏற்றும் நடவடிக்கையை முடியுமானவரை துரிதப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## சீமெந்து விலை அதிகரிப்பு?

(கொழும்பு)

சீனி, சமையல் எரிவாயு, பால்மா உள்ளிட்ட மேலும் சில பொருட்கள் தொடர்பில் பேசப்பட்டுவரும் நிலையில், சீமெந்து விலை அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, ஒரு மூடை சீமெந்து 950 ரூபாய் முதல், 1005 ரூபாய் வரையில் சந்தையில் முன்னதாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், தற்போது சீமெந்தின் விலை 1100 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதற்கு பதிலளித்த நுகர்வோர் அதிகார சபையின் உயர் அதிகாரிஒருவர், சீமெந்தின் விலையினை அதிகரிப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது அதிகார சபையினால் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

## வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்

### துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



வேங்கடவன் கதை

ஒருமுறை முனிவர்கள் எல்லோரும்கூடி கங்கை நதி கரையில் யாகம் ஒன்றை நடத்த திட்டமிட்டனர். அப்போது அங்கே நாரதர் தோன்றி, மும்மூர்த்திகளில் யார் பெரியவர்?, யாருக்கு "அவிர்பாகம்" கொடுப்பீர்கள்?" என்று கேட்டார். இது முனிவர்களை குழப்பத்தில் ஆழ்த்தியது. அவர்கள் பிருகு முனிவரிடம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி கேட்டுக் கொண்டனர். பிருகு முனிவர் மும்மூர்த்திகளை தேடிச் சென்றார்.

முதலில் பிரம்மனிடம் சென்றார். அங்கு பிரம்மா வேதத்தை ஓதிகொண்டிருந்தார். இன்னொரு வாயினால் நாராயண நாமத்தை உச்சரித்துக் கொண்டு இருந்தார். பிருகு முனிவரை கவனிக்கவில்லை. அடுத்ததாக கயிலாயத்துக்கு சிவனை காணச் சென்றார், பிருகு முனிவர். அங்கு சிவன் தியானத்தில் இருந்தார். பிருகு முனிவரை கவனிக்கமுடியாமல் போய் விட்டது. ஆகவே முனிவர் வைகுண்டத்தை நோக்கி சென்றார். அங்கு மகாவிஷ்ணு திருமகளுடன் இருந்தார். பிருகு முனிவரை வரவேற்கவில்லை.

(தொடரும்)

## கொவிட்டால் குணமடைந்த சிறுவர்களுக்கு பரவும் உறுப்பு அழற்சி நோய்

(கொழும்பு)

கொவிட் தொற்று ஏற்பட்டு குணமடைந்த சிறுவர்களுக்கு பல உறுப்புக்கள் சார்ந்த அழற்சி Multi system inflammatory syndrome உடன் தொடர்புடைய மிகவும் ஆபத்தான நோய் பரவி வருவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொவிட் நோயால் பாதிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின் சில குழந்தைகள் இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளாவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் மருத்துவமனையின் விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது, இந்த நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நாட்டின் பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

தற்போது 35 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அதற்காக சிகிச்சை பெற்றுள்ளனர்.



காய்ச்சல் ஏற்படுவதன் மூலம் இந்த நோய் ஏற்படுவதாகவும் கண்கள் சிவத்தல், நாக்கு சிவத்தல் மற்றும் சருமத்தில் சிவப்பு நிற தழும்பு போன்ற அறிகுறிகளை ஏற்படுத்துகிறது.

இந்த நோய் மூளை கல்லீரல், சிறுநீரகம் மற்றும் இதயத்தையும் பாதிக்கலாம். இது ஒரு ஆபத்தான சூழ்நிலை என்றும் விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இந்த நோய் சிறுவர்களுக்கு மத்தியில் இனங்காணப்பட்டாலும், கொவிட் நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த முதியவர்களுக்கும் இந்த நோய் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (நி-5)

# 'மு' எனும் புதிய கொரோனா வைரஸ் உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

(ஜெனீவா)

**கொலம்பியாவில் ஜனவரி மாதம் அடையாளம் காணப்பட்ட "மு" எனப்படும் புதிய கொரோனா வைரஸ் வகையை கண்காணிப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

"மு" அறிவியல் ரீதியாக பி1.621 என அறியப்படுகி றது. உலக சுகாதார ஸ்தாபனம் இந்த மாறுபாடு தடுப்புசிகளுக்கு எதிர்ப்பின் அபாயத்தைக் குறிக்கும் பிறழ்வுகளைக் கொண்டுள்ளது என்று கூறியது.

மேலும் அதை நன்கு புரிந்து கொள்ள மேலதிக ஆய்வுகள் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளது.

தற்போது நான்கு கோவிட் - 19 வகைகளை உலக சுகாதார ஸ்தாபனம் அடையாளம் கண்டுள்ளது. இதில் 193 நாடுகளில் பரவியுள்ள ஆல்பா மற்றும் 170 நாடுகளில் பரவியுள்ள டெல்டா வகைகளும் அடங்கும்.

"மு" தற்சமயம் கொரோனாவின் ஐந்தாவது வகையாக கணிக்கப்படவுள்ளது. (7-4)

# பன்னீர் செல்வத்தின் மனைவி காலமானார்



(சென்னை)

அ.திமுகவின் ஒருங்கிணைப்பாளரும், சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் தமிழக முதல்வருமான ஓ. பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி மாரடைப்பால் நேற்றுக் காலமானார்.

63 வயதாகும் திருமதி விஜயலட்சுமி உடல்நலக்குறைவின் காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக சென்னை புறநகர் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் காலமானார். (7-4)

# அமெரிக்க கடற்படை ஹெலிகொப்டர் கடற்பரப்பில் வீழ்ந்து விபத்து



(வோஷிங்டன்)

அமெரிக்கடற்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று சான் டியாகோ கடற் பகுதியில் நேற்று முன்தினம் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந் நிலையில் தேடுதல் மற்றும் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

MH-60S என்ற ஹெலிகொப்டர், சான்டியாகோ கடற்கரையிலிருந்து சுமார் 60 கடல் மைல் தொலைவில் நேற்று முன்தினம் மாலை 4:30 மணியளவில் வழக்கமான விமானப் பணிகளை மேற்கொண்ட போதே கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (7-4)

# ஆப்கானிஸ்தானில் இருந்து விலகுவது அமெரிக்காவின் சிறந்த முடிவு

## ஜோ பிடன்

(வோஷிங்டன்)

20 வருட யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஆப்கானிஸ்தானில் இருந்து படையினரை திரும்பப் பெறுவது அமெரிக்காவின் சிறந்த மற்றும் சரியான முடிவு என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மீண்டும் கூறியுள்ளார்.

நான் உங்களுக்கு என் வார்த்தையை அளிக்கிறேன், இது சரியான முடிவு, புத்திசாலித்தனமான முடிவு மற்றும் அமெரிக்காவின் சிறந்த முடிவு என்று நான் முழு மனதுடன் நம்புகிறேன் என்று பிடன் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது.

இந்த போரை எப்போது முடிப்பது என்ற பிரச்சினையை எதிர்கொண்ட நான்காவது ஜனாதிபதி தான் என்றும் தெரிவித்தார்.

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போது, இந்த போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று அமெரிக்க மக்களுக்கு உறுதி அளித்தேன். அதன்படி செய்துள்ளேன்.

20 வருட யுத்தத்தில் 2,448 அமெரிக்க சேவை பணியாளர்கள் மற்றும் 3,846 அமெரிக்க இராணுவ ஒப்பந்தக்காரர்கள் உயிரிழந்துள்ளனர். மற்றும் இது அமெரிக்காவிற்கு குறைந்தது 2.4 டிரில்லியன் டொலர் செலவை ஏற்படுத்தியது.

20 வருட யுத்தம் இனி அமெரிக்காவின் தேசிய நலனுக்கு சேவை செய்யாது என்றும் பிடன் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினரை வெளியேற்றும் பணி 'ஒரு அசாதாரண வெற்றி' என்று அழைத்தார்,

இருப்பினும் இது ஜனநாயகக் கட்சியினர் மற்றும் குடியரசுக் கட்சியினரால் பரவலாக விமர்சிக்கப்பட்டது. (7-4)

# தலிபான்களின் வசம் சிக்கிய அமெரிக்க பயோமெட்ரிக் கருவிகள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானை தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றியதால் ஏற்பட்ட குழப்பம் மற்றும் பதற்றத்திற்கு மத்தியில் அமெரிக்கப் படைகள் அங்கு இருந்து வெளியே றிய நிலையில் விமானங்கள், ஹெலி கொப்டர்கள் உள்ளிட்ட ஏராளமான இராணுவ தளபாடங்களை அங்கேயே விட்டு விட்டுச் சென்றனர்.

அவை அனைத்தும் தற்போது தலிபான்கள் வசம் சென்றுள்ளது. மேலும் அமெ ரிக்க இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டு வந்த பயோ மெட்ரிக் கருவிகள் சிலவும் தலிபான்களின் கையில் சிக்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தங்களுக்கான ஒப்பந்த தாரர்கள் மற்றும் உள்ளூரில் அமெரிக்க இராணுவத்தோடு பணிபுரிபவர்களை அடை யாளம் காண, அந்த கரு விகள் பயன்படுத்தபட்டு வந்தன.

அந்த வகையில் அந்த பயோ மெட்ரிக் கருவிகளில் ஆப்கானிஸ்தான் மக்கள் பலரின் கை ரேகை, கண் விழி ரேகை மற்றும் புகைப் படங்கள் உள்ளிட்ட தரவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த கருவிகள் தற்போது தலிபான்கள் வசம் சென்றிருப்பதால் அதில் உள்ள தரவுகள் மூலம் தங்களுக்கு எதிராக செயற்பட்ட ஆப்கான் மக்களை அவர்கள் அடையாளம் காண கூடும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்கு முன்பாக 72 இற்கும் அதிகமான விமானங்கள் மற்றும் ஏவுகணைகள், எதிர்ப்பு வாகனங்கள் என்பவற்றை இனிமேல் எவரும் பாவிக்க முடியாதபடி செயலிழக்கச்செய்து விட்டே கடைசிஅமெரிக்க படைகள் வெளியேறியதாகவும் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பு அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பாக் செயற்பாட்டில் இருந்ததாகவும் இறுதியில் அவற்றையும் செயலிழக்கச் செய்து விட்டே அமெரிக்க படைகள் ஆப்கானிலிருந்து புறப்பட்டதாகவும் ஆப்கானுக்கான அமெரிக்காவின் இராணுத் தளபதி தெரிவித்துள்ளார். (7-4)

# வங்கதேசம் தன்னார்வலர் படுகொலை 6 பேருக்கு மரண தண்டனை

(டாக்கா)

வங்கதேசத்தில் மனித உரிமை ஆர்வலரையும் அவரது நண்பரையும் படுகொலை செய்த முன்னாள் இராணுவ அதிகாரி உள்ளிட்ட 6 பேருக்கு அந்த நாட்டு பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

மனித உரிமைகளை வலியுறுத்தும் பத்திரிகையின் ஆசிரியர் ஸுல்ஹாஸ் மன்னானும், அவரது நண்பர் மஹ்பூப் ராபியும் மத அடிப்படைவாதிகளால் கடந்த 2016-ஆம் ஆண்டு வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இதுதொடர்பாக விசாரணை நடத்திவந்த பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றம், முன்னாள் இராணுவ அதிகாரி ஜியாவுல் ஹக் உள்ளிட்ட 6 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. (7-4)

# ஆப்கான் தூதரகத்தை கட்டாருக்கு மாற்றிய ஜப்பான்

(தோஹா)

ஆப்கானிஸ் தானுக்கான தங்கள் நாட்டுத் தூதரகத்தை தற்காலிகமாக கட்டாருக்கு மாற்றியுள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் தோஷிமிட்சு மோடெகி கூறியதாவது, ஆப்கானிஸ்தானு க்கான தூதரகப் பணிகள் கட்டார் நகருக்கு தற்காலிமாக மாற்றப்பட்டுள்ளன.

ஆப்கான் விவகாரத்தில் கட்டார் தலைநகர் தோஹாவின் முக்கியத்துவம் அதிகரித்து வருவது பிராந்திய நாடுகளின் தலைவர்களுடன் பேசியதில் தெரிய வந்துள்ளது என்றார்.

எனவே ஆப்கானுக்கான ஜப்பான் தூதரங்கம் கட்டாருக்கு மாற்றப்பட்டுள்ளது. (7-4)

# கிராம மட்டக் குழுக்கள் ஊடாக கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானம்

## மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக, கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் அமை க்கப்படும் கிராம மட்டக் குழுக்கள் ஊடாக கொவிட் கட்டு ப்பாட்டு நடவடிக்கைகளை முன் னெடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது. மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலை மையில் மெய்நிகர் தொடர்பாடல் மூலம் நேற்று முன்தினம் நடை பெற்ற விசேட கலந்துரையா டலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் களுக்கு காணப்படும் கடுமை யான வேலைப்பளுவைக் குறை க்கும் வகையில், கிராம உத்தி யோகத்தர் பிரிவு மட்டத்தில், கிராம உத்தியோகத்தர் தலை மையில் இந்தப் பிரதேச மட்டக்



குழுக்கள் கொவிட் கட்டுப்பாடு, நோயாளர் தனிமைப்படுத்தல், வீட்டிலேயே நோயாளர்களைப் பராமரித்தல், உணவுப்பொதி வழங்கல் உள்ளிட்ட பல விட யங்களையும் கையாளலாம் என்று இங்கு பரிந்துரைக்கப் பட்டது.

இதற்கு மேலதிகமாக, கொவிட் நோயாளர் மரணிக்கும் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், மாவட்ட பொது வைத்தியசாலையில் இறந்த சடலங்களைப் பேணுவதற்கான குளிரூட்டி வசதி மேல திகமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற மரண விசாரணை அதி காரியின் வேண்டுகோளுக்கி ணங்க, குளிரூட்டி பொருத்தப் பட்ட கொள்கலன்களை இந்தத் தேவைக்காக வழங்க ஏற்பாடு செய்வது என்று மாவட்டச் செயலர் சம்மதம் தெரிவித் தார்.

அத்துடன், கொவிட் நோயா ளர் போக்குவரத்துக்கு அவசி யமான மேலதிக வாகனத் தேவையை நிவர்த்தி செய் யவும், கொவிட் தொற்றுக்குள் ளான வெளிமாவட்ட சுகாதாரப் பணியாளர்களைத் தங்கவைக்க கட்டட வசதியை ஏற்படுத்தித் தரவும் மாவட்டச் செயலாளர் இதன்போது இணக்கம் தெரி வித்தார். (7-4-6-350)

# அடாத்தாக காணி பிடிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுப்பு

## கமநல சேவை நிலையம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறை பற்றின் பாலக்கட்டுவான் குளத் தின் எல்லைப்பரப்பிற்குள் அடா த்தாக காணிபிடிப்பவர்கள் தொட ர்பாக முள்ளியவளை கமநல சேவை நிலையத்தினால் முல் லைத்தீவு பொலிஸில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் உட்பிரிவு 83இல் குறிப்பிட்டது போன்று சிறிய நீர்ப்பாசன வேலையில் பாது காப்பில் தலையீடு செய்தலின் கீழ் தண்டனைக்குரிய குற்றமா கும். ஆதலால் எல்லைகள் இடப் பட்ட இடங்களினுள் தாங்கள் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ள வேண்டாம் என அறிய த்தருவதுடன் இவ் எல்லைப் பரப்பு பாலக்கட்டுவான் குளத் திற்கு சொந்தமானதாக காணப் படுவதனால் தாங்கள் மேலும் காணி பிடிக்கும் முயற்சியில் ஈடுபடின் நீதிமன்றத்தில் வழ க்குத் தாக்கல் செய்யப்பட்டு சட் டத்தின் முன் குற்றவாளி ஆக் கப்படுவீர்கள் என்பதை தெரி வித்துக் கொள்கின்றோம் என குளத்தின் காணிகளை பிடித்தவ ர்களுக்கு கமநல சேவை நிலை யத்தினால் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் குளத்தின் காணி யினை தொடர்ந்து குறித்த நபர்கள் துப்பரவு செய்த நிலை யில் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தினால் முல் லைத்தீவு பொலிஸில் குளத்தின் காணிகளை பிடிப்பவர்கள் தொட ர்பாக நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. (7-4-6-350)

# முறிகண்டி பிரதேசத்தில் நிர்வாக கட்டமைப்பை கிளிநொச்சியுடன் இணையுங்கள்

## மக்கள் விடுதலை முன்னனி கோரிக்கை

(முறிகண்டி)

முறிகண்டி உள்ளிட்ட பிர தேசத்தின் நிர்வாக கட்டமை ப்பை கிளிநொச்சியுடன் இணை யுங்கள் என மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத் துள்ளது. அக்கட்சியின் கிளி நொச்சி முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர்களால் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிடப் பட்டது.

இதன் போது கருத்து தெரி வித்த அக்கட்சியின் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட அமைப் பாளர்களில் ஒருவரான கணேச பிள்ளை கருத்து தெரிவிக்கை யில்,முறிகண்டி பிரதேசத்தில் இறக்கும் மக்களின் உடல்களை கொவிட் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனு ப்ப கட்டாயப்படுத்தப்படுகின்ற னர்.

அங்கு முடிவுகளை பெற்று சடலத்தை பெறுவதற்கு 3 நாட் கள் தேவை என்பதுடன் தற் பொழுது இருக்கும் சூழலில் பொருளாதார நிலையில் இருக் கின்ற பணத்தையும் செலவ ழித்து பெரும் துன்பங்களை அப்பகுதி மக்கள் எதிர் கொள் கின்றனர்.இதனை தவிர்ப்ப தற்கு மாங்குளம் வைத்தியசா லையை பலப்படுத்தி அங்கு PCR பரிசோதனையை மேற் கொள்ள இந்த அரசாங்கத்தின் ஊடாக சுகாதார தரப்பினர் நட வடிக்கை எடுக்க வேண்டும். அது அந்த மக்களிற்கு சடலங் களை வைத்தெடுக்க இலகுவாக இருக்கும்.அல்லது, முறிகண்டி பிரதேசத்தை கிளிநொச்சி மாவ ட்டத்துடன் இணைத்து விட வேண்டும். இதில் ஒன்றை மேற்கொண்டால் அப்பகுதி மக் களிற்கு இலகுவானதாக இரு க்கும்.

இவ்வாறான நிலையில் இறந்த குமரன் கோபால் என் பவரை முல்லைத்தீவு மாஞ் சோலை வைத்தியசாலையில் 3 நாள் பரிசோதனை முடிவுக்காக வைத்திருந்துவிட்டு, சடலத்தை பாரமெடுத்து செல்லுமாறு உற வினர்களுக்கு அறிவித்தல் விடு க்கின்றனர்.

குறித்த நபரின் சடலத்துக்கு மாறாக கொவிட் தொற்றாளர் ஒருவரின் சடலமே அங்கு காண ப்பட்டது. இவ்வாறான தவறு களை சாதாரணமாக விட முடி யாது. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது இருக்கவும், மக் களின் நிர்வாக இலகுபடுத்த லிற்காகவும் குறித்த பகுதியை கிளிநொச்சி நிர்வாக மாவட் டத்துடன் இணைப்பதே பொருத் தமானது என அவர் குறிப்பிட் டார். (7-4-6-100)

# வவுனியாவில் ஒரு மாதத்தில் 3328 தொற்றும் 50 மரணங்களும்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் கட ந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 3328 கொரோனா தொற்றா ளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளதுடன் 50 பேர் மரண மடைந்துள்ளதாக சுகாதா ரப் பிரிவினர் தெரிவித்துள்ள னர்.

தற்போது வவுனியாவில் நாளுக்கு நாள் கொரோனா அதி கரித்து வரும் நிலையில் சடங் குகளிற்கோ, நிகழ்வுகளுக்கோ தேவையற்ற விதத்தில் வீட்டில் இருந்து வெளியில் வருவதனை இயன்றளவு தவிர்க்கும் போது நோய் பரம்பலை கட்டுப்படுத்த முடியும். இதற்கு அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார பிரிவினர் மேலும் தெரிவித் துள்ளனர். (7-4-6-299)

# கசிப்பு உற்பத்தியினால் அதிகரிக்கும் குடும்ப வன்முறைகள்

## முக்கொம்பன் மாதர் சங்கம் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக்கொம் பன் கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியினால் குடும்ப வன்முறைகள் அதிகரிப்பதாக முக்கொம்பன் மாதர் சங்கம் அறிவித்துள்ளது.

முக்கொம்பன் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியினால் குடும்ப வன்முறைகள் இடம்பெறுவதன் காரணமாக சிறுவர்கள் குறிப் பாக பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் பல பெண்கள் தற் கொலைக்கு முயன்று காப்பாற்றப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிபொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முக்கொம் பன் மாதர் சங்கம் தெரிவித்துள் ளது. (7-4-6-350)

# முதலைகளின் பெருக்கம் காரணமாக நன்னீர் மீன்பிடி தொழிலாளர் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் நன்னீர் மீன் பிடித் தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளில் பெரும் சிர மங்களை எதிர்நோக்கி வரு வதாக தெரிவித்துள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளத்தில் 46 வரை யான நன்னீர் மீன்பிடி தொழி லாளர்கள் நன்னீர் மீன்பிடியை நம்பி வாழ்ந்து வருகின்றனர்

இந்த நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் தற்போது பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருவதாக தெரிவித் துள்ளனர் அதாவது முதலை களின் பெருக்கம் மற்றும் குள த்தின் உட்பகுதியில் காணப்படு கின்ற மரக்கட்டை கள் காரண மாக நாளாந்தம் தமது மீன்பிடி வலைகள் சேதமடைந்து வரு கின்றன என்றும் தற்போது ஒரு கிலோ அல்லது இரண்டு கிலோ மீன் மட்டுமே பிடிக்கப்படுகின் றன. இதன் மூலம் 300 ரூபாய் க்கும் குறைந்த அளவு வரு மானம் கிடைக்கப் பெறுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதைய கொவிட் -19 மற்றும் ஊரடங்கு சட்டம் காரண மாகவும் அத்தியாவசிய பொரு ட்களின் விலை அதிகரிப்பு கார ணமாகவும் மிகமோசமாக பாதி க்கப்பட்டு இருப்பதாக தெரிவித் துள்ளனர் எனவே தமக் கான நிவாரண உதவிகளை பெற்று தருமாறு கோரியுள் ளனர். (7-4-6-315)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறியோர்க்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் தனிமைப் படுத்தல் ஊரடங்கு நேரத்தில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்த 10 வர்த்தக நிலையங்கள் மற்றும் உறவி னர் வீடுகளுக்கு சென்ற 25 பேருக்கு எதிராக சுகாதாரப் பிரி வினரால் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் சுகா தார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர் கள், பொலிஸார் ஆகியோர் இணைந்து வவுனியா, மரக்க ாரம்பளை - கல்மடு வீதியில் விசேட கண்காணிப்பு நடவடிக் கையினை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த பகுதி யில் தனிமைப்படுத்தல் ஊரட ங்கு சட்டத்தை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வியா பாரத்தில் ஈடுபட்ட 10 வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரி வினரால் பூட்டப்பட்டதுடன், அவர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் விடப்பட்டது. அவர்களிடம் அன்டிஜன் பரி சோதனை முன்னெடுக்கப் படவுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடு ப்பது குறித்தும் பரிசீலித்து வருகின்றனர். இந்நிலையில், மாவட்டத்தின் தற்போதைய அபாய நிலைமையை கருத் தில் கொண்டு கொவிட் பரம் பலைக் கட்டுப்படுத்த பொது மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ள னர். (7-4-6-250)



# ஆயுர்வேத சிகிச்சை மூலம் சுமார் 4 ஆயிரம் கொவிட் நோயாளர்கள் குணமடைவு

**(கொழும்பு)**

**நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான நான்காயி ரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆயுர்வேத சிகிச்சை மூலம் குணமடைந்துள்ளதாக சுதேச வைத்திய ஊக்குவிப்பு, கிராமப்புற மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.**

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்ற சுமார் 299 பேர் மாத்திரமே மேலதிக சிகிச்சைக்காக மேற்கத்தேய வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக, நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற, ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், சுமார் ஐயாயிரத்து 858 கொரோனா நோயாளிகள் 13 ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றனர், அவர்களில் நான்காயிரத்து 720 பேர் இப்போது முழுமையாக குணமடைந்துள்ளனர்.

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்த 299 கொரோனா நோயாளிகளுக்கு மாத்திரமே மேற்கத்தேய வைத்தியசாலைகளில் சிகிச்சை தேவைப்பட்டது.

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கொரோனா சிகிச்சை ஆயுர்வேத மற்றும் மேற்கத்தேய வைத்திய நடைமுறைகள் இரண்டின் கலவையாக மேற்கொள்ளப்பட்டது.

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அரசின் மேற்கத்தேய வைத்தியசாலைகளுடன் இணைந்து செயற்படுகின்றது.

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடையே ஏற்படும் சிக்கல்கள் மிகக் குறைவு, இறப்புகள் எதுவும் பதிவாகவில்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

# ஒட்சிசன் இன்றி உயிரிழக்க இடமளியேன் - கெஹெலிய



ஒட்சிசன் இன்றி எந்தவொரு நபரும் உயிரிழப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மன் தொழில் மற்றும் வர்த்தக துறையின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் பங்கேற்ற போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இலங்கைக்கு ஒட்சிசனை வழங்குவதில் இலங்கையின் ஜேர்மன் தொழில் மற்றும் வர்த்தக துறையின் பிரிவின் ஒத்துழைப்பு மிக முக்கியத்துவமுடையதாகும். எனவே இதற்காக உங்களின் முழுமையான ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது என கெஹெலிய தெரிவித்தார். (நி-5)

**(கொழும்பு)**

நாட்டில் நாளாந்த ஒட்சிசன் தேவை அதிகரித்துள்ளமையால் தேவையான ஒட்சிசனைக் கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை பகுதியில் கொவிட் 19 நோயாளிகளுக்கு 50 படுக்கைகள் கொண்ட தற்காலிக கொவிட் சிகிச்சை விடுதி இராஜாங்க அமைச்சர் தேனுகா விதானகமகேவின் வேண்டுகோளின் பேரில் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் மருத்துவமனை பணிப்பாளர் வைத்தியர் சென ரத் பண்டாரவிடம் கையளிக்கப்பட்டது.

# இதுவரை சுமார் 8 மில்லியன் மக்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றனர்

**(கொழும்பு)**

நாட்டில் 8 மில்லியனுக்கும் அதிகமான நபர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இதுவரை 8 இலட்சத்து 169 ஆயிரத்து 232 இலங்கையர்கள் முழுமையாக தடுப்பூசியினை பெற்றுக் கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தரவுகள் தெரிவிக்கின்றன. (நி-5)




## கஜேந்திரா

குடிச்சிட்டு வந்திருக்கிறாயா என்று ஒரு கேள்வி தான் கேட்டேன்




டக்குன்று மூஞ்சில இருந்த மாஸ்க்க கழட்டி சந்தேகமா இருந்தா கிட்ட வாங்க ஊதிக காமிக்கிறேன்ன்னா




## இலக்சிகா

இங்கு பல மனிதர்கள் வாழ்ந்தாலும் மனிதாபிமானம் இன்னமும் குழந்தைகளிடம் மட்டுமே வாழ்ந்து கொண்டே இருக்கிறது



## இந்துஜா

மிகச் சிறந்த குடும்பஸ்தன் என்பது யாதெனில்... கடைசி வரை மனைவியை அடிக்காமல் இருப்பது மட்டுமல்ல



மனைவியிடம் அடிவாங்காமல் இருப்பதும் தான்......

## நிஷாந்தி




## வரோதயன்



சேலையிலே வீடு கட்டவா? சேர்ந்து வசிக்க




பெரிய இன்ஜினியரு. சேலையிலே வீடு கட்டுவாராம். செங்கல், சிமெண்டு வச்சு கட்டுற வீடே பிச்சு கிட்டு போயிடுது. இவரு சேலையிலே வீடு கட்டுவாராம்

## நந்தன்



பணக்காரன் ஏன் மேலும் பணக்காரன் ஆகுறான்... ஏழை ஏன் இன்னும் ஏழை ஆகிறான்



ஏன்னா பணக்காரனுக்கு பணம் குட்டி போடுது ஏழைக்கு வட்டி போடுது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இரத்த தானம் செய்யுங்கள்

## குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு பொதுமக்கள் இரத்த தானம் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு தேசிய இரத்த மாற்று நிலையம் நன்கொடையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையினால் குருதிக் கொடையாளர்களிடமிருந்து இரத்தத்தை சேகரிப்பதற்கான விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய இரத்த மாற்று நிலையத்தின் பணிப்பாளர் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புற்று நோய், தலசீமியா, லியுகேமியா போன்ற நோயாளர்களுக்கும், திடீர் விபத்துகளினால் பலத்த காயமடைபவர்கள், அவசர சத்திர சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்ட நோயாளர்கள் மற்றும் பிரசவத்திற்காக உள்ள தாய்மார்களுக்கும், தேவையான இரத்தத்தை குறை இன்றி வழங்குவதற்கு இரத்தம் சேகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன், ஒவ்வொரு மாதமும் சுமார் ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவத்திற்கு இரத்தம் தேவைப்படுவதனால், இரத்தத்தின் தேவையை முன் கூட்டியே தயார் நிலையில் வைக்க வேண்டும். இதேவேளை, நாடளாவிய ரீதியில் 87 இரத்த சேகரிப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. எனவே,தேசிய இரத்த மாற்று நிலையத்திற்கு தொலைபேசிஅழைப்பை மேற்கொண்டு, இரத்த தானம் செய்வதற்கான திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்வதன் மூலம் இரத்ததானம் செய்வதற்கு ஒன்றிணையுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5)

# எத்தனை திரிபுகள் வந்தாலும் தடுப்பூசியே சிறந்த தீர்வு

## விசேட மருத்துவர் பிரியதர்ஷினி

**கொழும்பு)**

**கொவிட் மற்றும் டெல்டா வைரஸையும் விட மிகவும் கடுமையான லெம்டா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கும், தற்போது பயன்படுத்தப்படுகின்ற தடுப்பூசிகளின் மூலம் நன்மை கிடைக்கும் என நம்புவதாக கொழும்பு மருத்துவ பீடத்தின் மருந்துவியல் தொடர்பான பேராசிரியர் விசேட மருத்துவர் பிரியதர்ஷனி கலப்பத்தி தெரிவித்தார்.**

கொவிட் வைரஸ் லெம்டா வைரஸை போல் இல்லை என்றாலும்,டெல்டா வைரசுக்கு கொவிட் தடுப்புசி மூலம் பாதுகாப்பு கிடைப்பதாக தெரிய வந்துள்ளதால், எதிர் காலத்தில் வரக்கூடிய புதிய வகை வைரஸ் திரிபு களுக்கும் தடுப்புசி மூலம் பாதுகாப்பு பெறலாம் என கருத முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோல், கொவிட் வைரஸின் பல்வேறு திரிபுகள் வந்தாலும், இன்று பயன்படுத்தப்படும் அதே சிகிச்சை முறைகளைப் பயன்படுத்த முடியும்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே விசேட வைத்தியர் பிரியதர்ஷனி கலப்பத்தி இதனை தெரிவித்தார்.

இதற்கான மிகச் சிறந்த தீர்வு தடுப்புசி முறையே ஆகும். தடுப்புசி வழங்கப்படுவதால் வைரஸ் தொற்று குறைவடைகின்றது. மேலும் இரண்டு டோஸ் தடுப்புசிகளையும் பெற்றதன் பின்னர் வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மிகக் குறைவானதாகவே இருக்கும். இதன் மூலம் பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் கூட மரண வீதம் குறைவாகவே காணப்படும். தடுப்புசி பெற்ற ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு வைரஸ் பரவும் வீதம் குறைவு போன்ற நன்மைகள் இதில் காணப்படுவதாகவும் விசேட மருத்துவர் பிரியதர்ஷனி கலப்பத்தி மேலும் சுட்டிக்காட்டினார். (நி-5)

# விபத்திற்குள்ளான பாரவூர்தி



(கொழும்பு)

எரிபொருள் கொண்டு சென்ற பாரவூர்தி ஒன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், பெலியத்த - இசுருபுர பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது.

மாத்தறை எரிபொருள் கிடங்கில் இருந்து மத்தள பகுதிக்கு எரிபொருள் கொண்டு சென்ற பாரவூர்தி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.பாரவூர்தியின் முன்பக்க சில்லு வெடிப்புக்குள்ளானதால், சாரதியினால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும், இதனால் பாரவூர்தி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உடல் எடை

இந்த உலகத்திலே "அடிமைகள்" அதிகம்! இந்த நூற்றாண்டிலே கூட இப்படியா என்று ஆச்சரியப்படாதீர்கள்! நான் சொல்ல வந்தது வேறே விடயம்!

"அன்புக்கு நான் அடிமை" என்று சொல்லுறவர்கள் எத்தனை பேர். அதே மாதிரி போதைக்கு அடிமையனவர்கள் எத்தனை பேர்? நம்ம ஊரைப் பொறுத்தவரைக்கும் நாக்குக்கு அடிமையானவர்கள் நிறைய பேர் உண்டு.

சர்க்கரை வேண்டாம் என்று வைத்தியர் சொல்லுவார். ஆனால் சர்க்கரை தான் வேண்டும் என்று நாக்கு சொல்லும்! இவர்கள் நாக்கு என்ன சொல்லுகிறதோ அதன்படி தான் நடப்பார்கள் டாக்டர் சொல்லுகிறபடி நடக்கமாட்டார்கள்!

நான்கு வயதிலே "கமர்கட்டு" மிட்டாய் சாப்பிட்டீர்கள். அதையே நாற்பது வயதிலேயும் சாப்பிட வேண்டும் என்றால் எப்படிங்க. ஒருத்தர் சாப்பிடுகின்ற ஆகாரம் அவர் செய்கிற வேலைக்குப் போதுமானதா இருக்கிறதா? அது போதும் அப்படி இருக்கிறதா? இல்லையா என்கிறதை காட்டுகின்ற அளவு கோல் தான் அவருடைய எடை!

தொடர்ந்து உங்கள் "வெயிட்" கூடிக் கொண்டு போகுது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன அர்த்தம். உணவுடைய அளவு உடம்போடு தேவையை விட அதிகம் என்று அர்த்தம். தேவைக்கு அதிகமாக சாப்பிடறிங்கள் என்று அர்த்தம். ஒரு மேசைக் கரண்டி வெண்ணெய். ஒரு பாட்டில் குளிர்பானம். இதிலே சுமாரா 100 கலோரி இருக்கிறது.

ஒரு நாளைக்கு இப்படி 100 கலோரி வீதம் அதிகமாகி விட்டால் ஒரு வருடத்தில் சுமாரா 5 கிலோ எடை கூடி போயிடுமாம்! மாப் பொருள், எண்ணெயிலே பொரிச்சப் பொருள், இனிப்பு இதையெல்லாம் அதிகமா சாப்பிட்டால் கலோரி மதிப்பும் கூடும்.

ஸ்கூட்டர் கார் இவைகளெல்லாம் பிரயாணம் செய்கிறது. உட்கார்ந்தே இருந்து வேலைகளை கவனிக்கிறது. இதனாலேயெல்லாம் தசைகள் வேலை செய்கிறது குறைகிறது.

எனக்கு தெரிந்த ஒரு வயதான பெரியவர் அவர் உடம்பை பார்த்தீங்கள் என்றால் அவர் உண்மையிலேயே பெரியவர் தான் என்று நீங்களும் ஒத்து கொள்ளுவீர்கள்! வயது 60க்கு மேலே இருக்கிறது. அவருக்கு இப்பவும் பிடித்தமான சாப்பாடுகள் என்ன தெரியுமா?

ஐஸ்கிறீம், ஜிலேபி, உருளைக்கிழங்கு இதனாலேயே கொழுப்புச்சக்தி ஏறிக்கொண்டே போகுது. கொழுப்பு சக்தி குறைய வேண்டும் என்றால் தேகப்பயிற்சி செய்யவேண்டும். மற்ற ஆகாரங்களோடு அளவை குறைக்க வேண்டும். இல்லை என்றால் எடை கூடிக்கொண்டே தான் போகுது.

ஊளைச்சதை என்று சொல்கிறோமே! இதனாலே கெடுதல் தான் அதிகம்! இதய நோய், சிறுநீரகக் கோளாறு, நீரிழிவு நோய் இதற்கெல்லாம் இது தான் மூலக்காரணம்! நோய் ஒரு பக்கம் இருக்க... பார்க்கிறதுக்கு வேறே கஷ்டமாயிருக்கும். நடக்கிறதுக்கு, ஓடுகிறத்திற்கெல்லாம் கஷ்டம். நடக்கிறதிற்கே கஷ்டம் என்றால் ஓடுகிறது எப்படி?

இந்தக் காலத்தில் எல்லாம் பஸ்சிலே ஏற வேண்டும் என்றால் ஓடிப்போய் தான் ஏற வேண்டியிருக்கிறது. நடந்துபோய் ஏர்கிற வரைக்கும் அது காத்துக் கொண்டுக்கிறது இல்லை. அப்படி இருக்கிறப்போது காலத்திற்கு தகுந்த மாதிரி உடம்பையும் கச்சிதமாக வைத்துக்கொள்ள வேண்டாமா?

35,40 வயதிலே இந்த ஊளைச்சதை எல்லோரும் சாதாரணமாக வரும். 50 வயதிக்குள்ளே இதைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் மனிதனுடைய ஆயுள் காலம் குறைந்து விடும். 40 , 45 வயதிலே எடை 20 சதவீதம் அதிகமாகக் இருந்தால் 30 சதவீத ஆயுள் குறைந்து விடும். 50 வயதிலே சராசரி மனிதனை விட 25 கிலோ எடை அதிகமாக இருந்தால் 50 சதவீத ஆயுள் குறைந்து விடும்.

பயமுறுத்துவதற்காக இந்த விபரத்தை சொல்லவில்லை. எல்லோரும் பத்திரமாக – பத்தியமாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் சொல்கின்றேன். "நீங்கள் என்ன வேண்டும் என்றாலும் சாப்பிடுங்கள். கூடவே எங்கள் கம்பனி மருந்தையும் சாப்பிடுங்கள் எடை கூடாது" என்று சில பேர் விளம்பரம் செய்வார்கள். இது மாதிரி மருந்துகள் எல்லாம் எப்படி வேலை செய்யும் என்றால் உங்கள் பசியை குறைத்து விடும். அதனால் நீங்கள் சாப்பிடுகின்ற ஆகாரம் குறையும், எடை குறையும் உண்மை தான்! ஆனால் உங்கள் உடம்பிற்கு தேவைப்படுகின்ற மற்ற சத்துகளும் போதுமான அளவிற்கு கிடைக்காமல் போய் விடும்.

இதனாலே சில வியாதிகள் சுலபமாக வருகிறதிற்கும் வாய்ப்பும் உண்டு. சில கம்பனிகள் நிங்கள் தினமும் என்ன சாப்பிட வேண்டும், எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று அவர்கள் பட்டியல் போட்டு கொடுப்பார்கள். உங்கள் உடம்பு பற்றி என்ன தெரியும்? அதை தீர்மானிக்க வேண்டியது நீங்கள் தான்.

எதையாவது மருந்து சாப்பிட்டு திடீர் என்று உடல் எடை குறைந்து விடுகிறதும் தப்பு. சீராக தான் சரி செய்ய வேண்டும். திடீர் என்று குறைத்திட்டால் உடம்பிலே எதிர்ப்பு சக்தி குறைந்து விடும். அப்புறம் சுலபமாக வியாதி தேடிக் கொண்டு வந்திடும். எடை குறைய வேண்டும் என்றால் இனிப்பு, மாப்பொருள், எண்ணெய் இதையெல்லாம் குறைக்க வேண்டும். சேர் நாமெல்லாம் அடுத்தவர்களை "எடை" போடுகிறதிற்குத்தான் அதிகமாக ஆசைப்படுறோம். நம்மளுடைய எடை என்ன என்று நமக்குத் தெரியவில்லை. அதனாலே மாதத்திற்கும் ஒரு தடவையாவது உங்களை நீங்களே எடை போட்டுப்பாருங்கள்! எடை கூடினாலும் குறைந்தாலும் அதற்கு தகுந்த மாதிரி சாப்பாட்டுப் பழக்கத்தை மாத்திக்கொள்ளுங்கள்!

ஒரு குண்டான ஆசாமி. வெளிநாட்டுக்குப் போயிருந்தார். அங்கே ஒரு எடை போடுகிற மிஷின் அதிலே எடை பார்க்கிறதிற்காக ஏறி நின்று காசை போட்டார். உடனே உள்ளேயிருந்து ஒரு டிக்கெட் வந்து விழுந்தது. அதையெடுத்துப் பார்த்தார். அதிலெ எழுதியிருந்தது. "ஒரு நேரத்தில் ஒருத்தர் மட்டுமே ஏறிநின்று எடை பார்க்க வேண்டும்". என்று!




# இரண்டு சீடர்கள்

அதனால் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்," என்று கூறி அவனுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டார்.

சந்துரு தன் உபசானையை முடித்துக்கொண்டு குருவிடம் விடைபெற்று தன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். இதற்குப் பின் ஐந்தாறு ஆண்டுகள் சென்றன.

ஒரு நாள் அந்நாட்டு மன்னன் மாரவர்மன், கருணைவேந்தனை தன் தர்பாருக்கு வரும்படி ஆட்களை அனுப்பினான்.

மன்னன் அனுப்பிய ரதத்தில் அமர்ந்து அரண்மனையை அடைந்தார் குரு. "நான் என் தர்பாரில் தகுதியும் திறமையும்பெற்ற ராஜகுரு ஒருவரை நியமனம் செய்ய விரும்புகிறேன்.

அப்பதவிக்கு ஏற்றவர்கள் தங்களது சீடர்களான மகிமை தாசனையும், சந்துருவையும் எல்லோரும் பரிந்துரைக்கின்றனர்.

"சந்துரு நாடெங்கிலும் பயணம் செய்து மிகவும் சக்தி வாய்ந்தவன் எனப்பெயர் பெற்றிருக்கிறான்.

அவனைக் கண்டு கொடியவர்கள் நடுங்கி தம்மைத் திருத்திக் கொண்டு நல்லவர்களாக ஆகிவிடுகின்றனர்.



"அவனுக்குப் பல சீடர்கள் கூட இருக்கின்றனர்.

அவர்கள் தம்மை "தாசசேனை" எனக் கூறிக் கொண்டு கொடியவர்களைத் தேடிப் பிடித்து தம் குருவின் முன் கொண்டு போய் நிறுத்துகின்றனர்.

அக்கொடியவர்கள் எங்கே சந்துரு தங்களை சபித்து விடுவானோ எனப் பயந்து திருந்தி விடுகின்றனர்," என்றார்.

"அப்படியா? சரி! மகிமைதாசனைப் பற்றி என்ன தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டார்.

(தொடரும்)

# மகாபாரதம்

பீஷ்மர் கூறத் தொடங்கினார். "அரசன் முதலில் தன்னை வெல்ல வேண்டும். அதாவது ஐம்புல அடக்கம் வேண்டும். பிறகு பகைவரை வெற்றி கொள்ள வேண்டும்.

தன்னை வென்றவனே பகைவனை வென்றவன் ஆவான். கோட்டைகள், நாட்டின் எல்லை, மக்கள் கூடும் இடங்கள், சோலைகள், ரகசியமான இடங்கள், அரண்மனை ஆகியவற்றைப் பாதுகாக்கத் தகுதியுள்ள ஆட்களை நியமிக்க வேண்டும்.




நன்றாகச் சோதிக்கப்பட்டவர்களும், அறிவாளிகளும், பசி, தாகங்களைப் பொறுத்துக் கொள்ளும் இயல்புடையவரகளும், சமயத்தில் முட்டாளும், குருடனும், செவிடனும் போல நடிக்கத் தெரிந்தவர்களும் ஆகிய வர்களையே இரகசிய ஒற்றர்களாக நியமிக்க வேண்டும்.

அரசன் எல்லா அமைச்சர்களிடத்தும் மூவகை நண்பர்களிடத்தும் மைந்தரிடத்திலும், நகரத்திலும், கிராமத்திலும், பிற மன்னர்களிடத்திலும் ஒருவரைஒருவர் அறியா வண்ணம் ஒற்றர்களை இருக்கச் செய்ய வேண்டும்.

கடைகள், விளையாடும் இடங்கள், மக்கள் கூடும் இடங்கள், வீதிகள், தோட்டங்கள், பூங்காக்கள், கல்வி நிலையங்கள், நீதிமன்றங்கள், வேலைக்காரர்கள் இருக்கும் இடங்கள், செல்வந்தரின் வீடுகள் ஆகிய இடங்களில் பிற அரசர்களால் அனுப்பப்படும் ஒற்றர்களைத் தன் ஒற்றரைக் கொண்டு தேடி அறிந்து தண்டிக்க வேண்டும். ஒற்றரைத் தடுப்பதன் மூலம் தீமைகள் தடுக்கப்படும்.

பகை அரசன் தன்னை விடப் பலம் உள்ளவனாக இருந்தால் தூது அனுப்பி சமாதானம் செய்துகொள்ள வேண்டும்.

நூல் அறிவு மிக்க அந்தணர்களையும், சத்திரியர்களையும் வைசியர்களையும் அமைச்சர்களாகக்கொள்ள வேண்டும். பகைவர்களைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

தக்க காலம் வரும் போது அவர்களை விரைந்து கொல்ல வேண்டும். எப்போதும் மூர்க்கத்தனமாக போரிடக் கூடாது. சாமம், தானம், பேதம் ஆகிய மூன்று வழிகளில் பெறக்கூடிய பொருட்களை அடைய வேண்டும். (தொடரும்)

ஒரு கோடியில் நின்றுகொண்டு காட்டும் பிடிவாதம் ஒருபோதும் நிலைக்காது. நடுநிலையிலிருந்து கடைப்பிடிக்கும் நிதானமே நாளும் உறுதியாய் நிற்கும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசின் ஊரடங்கு அறிவிப்பு; அமுல்படுத்துவது யார் பொறுப்பு?

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக நாட்டை முடக்குங்கள் என்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு கடும் அழுத்தத்தைக் கொடுத்தது.

மருத்துவ சங்கங்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் உட்பட எதிர்க்கட்சிகளும் மேற்படி கோரிக்கையை முன்வைத்தன.

நாட்டை முடக்குவது, ஏழை மக்களின் ஜீவனோபாயத்துக்கு கடும்தாக்கத்தை ஏற்படுத்தும்என அரசதரப்பு கருதியநிலையில், நாட்டை முடக்குங்கள் என்ற கோரிக்கை செவிமடுக்காதவாறு கடந்துபோனது.

எனினும் கொரோனாத் தொற்றின் அதிகரிப்பும் இதனால் ஏற்படும் மரணங்களும்நாள் தோறும் அதிகரிக்க, அதற்கு ஈடுகொடுக்க முடியாத சூழ்நிலை அரசாங்கத்தை இறுக்கிக் கொண்டது.

கூடவே நாட்டை முடக்கவேண்டுமென பௌத்தபீடங்களும் கோசமெழுப்ப எதுவும் செய்யமுடியாத நிலையில் நாட்டை முடக்குகின்ற அறிவிப்பு அரசாங்கத்தால் விடுக்கப்பட்டது.

ஆம். ஊரடங்குச்சட்டம் அறிவிக்கப்பட்டு ஓரிரு தினங்கள் மக்கள் அதனைக் கடைப்பிடித்தனராயினும் தற்போது ஊரடங்குச் சட்டம்அமுலில் இருக்கிறதா? என்று கேட்கின்றளவில் எங்கும் மக்கள் நடமாட்டம் சர்வ சாதாரணமாயிற்று.

என்ன செய்வது? நீண்டகாலம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தினால் இப்படியான எல்லை மீறல்கள் நடந்தாகும் என்பது அரசாங்கத்துக்கும் படைத்தரப்புக்கும் நன்கு தெரியும்.

இதுதவிர, நாட்டை முடக்குவதில் அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய விருப்பமின்மையும் சேர்ந்து மக்கள் நடமாடுவது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாதீர்கள் என்பதுபோல படைத்தரப்புக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கலாமென ஊகிப்பதிலும் தவறில்லை.

எவ்வாறாயினும் நாட்டை முடக்குவதும் அதனூடாக கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதும் சாத்தியப்படப்போவதில்லை என்பதுதான் உண்மை.

எனவே, கொரோனாத் தொற்றிலிருந்து எங்களை நாமே பாதுகாப்பது எங்ஙனம்? என்பது பற்றிச் சிந்திப்பதும் அதைச் செயற்படுத்துவதும்தான் இப்போதிருக்கின்ற முதன்மை விடயம் ஆகும்.

அந்தவகையில், தேவையில்லாமல் வெளியில் செல்வது, அத்தியாவசியத் தேவை காரணமாகச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டால் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மிக இறுக்கமாகக் கடைப்பிடிப்பது என்ற இரண்டு விடயங்கள் தொடர்பில் விழிப்பாக இருந்தால் கொரோனாத் தொற்றிலிருந்து ஓரளவுக்கேனும்பொது மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதைவிடுத்து ஊரடங்குவேளையிலும் வெளியில்சென்றுவருவதற்கு என்னால் முடியும் என்ற மிடுக்கில் எல்லைமீறும்போது, கொரோனாத் தொற்றுக்கு ஆளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இப்போதெல்லாம் வடபுலத்தில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிவருகிறது. கூடவே கொரோனாத் தொற்று மரணங்களுக்கும் குறைவில்லை என்ற அவல நிலையில் இருக்கின்றோம்.

ஆகவே, கொரோனாத் தொற்றிலிருந்து எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளுதல்என்ற விடயத்தில் நாம் திடசங்கற்பத்துடன் இருப்பதுடன் கொரோனா குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடத்தில் சதா ஏற்படுத்துவதிலும் பொது அமைப்புக்களின் பணி தொடர்ச்சியாக இருக்கவேண்டும். அப்போதுதான் கொடிய கொரோனாவிலிருந்து எமது மக்கள் சமூகம் தப்பிப் பிழைக்கமுடியும்.

# யாழில் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த அரச அலுவலர்

## கடமைகளுக்கு ஒத்துழைக்குமாறு நீதிமன்றம் கட்டளை

(குப்பிழான்)

வடக்கு மாகாண அமைச்சு ஒன்றில் கடமையாற்றும் பெண் அரச அதிகாரியொருவருக்கு கொரோனா நோய்த்தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தமை தொடர்பில் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகரின் கடமைக்கு ஒத்துழைக்குமாறு கட்டளை வழங்கியுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சு ஒன்றில் கடமையாற்றும் பெண் அதிகாரி ஒருவருக்கு அலுவலக மட்டத்தில் கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டது.

இந்தநிலையில் அவரது தனிப்பட்ட முயற்சியினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்று இல்லையென அறிக்கையிடப்பட்டது.

மேற்படி குழப்ப நிலை காரணமாக பெண் அதிகாரியின் கணவரான அரச அலுவலர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கூறப்பட்ட சுயதனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைப் பின்பற்றவும் குடும்ப விபரங்களை வழங்கவும் மறுத்துள்ளார்.

எனினும், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரியினால் குறித்த பெண் அதிகாரிக்கு கொரோனாத் தொற்று உள்ளதாக கடிதம் வழங்கப்பட்டது. இந்தநிலையில் மேற்படி பெண் அதிகாரியின் கணவரையும் வீட்டில் உள்ளவர்களையும் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அன்டிஜன் பரிசோதனைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்கள் சமுகமளிக்கவில்லை. இதன்காரணமாக நேற்றைய தினம் அன்டிஜன் பரிசோதனையை முன்னெடுக்க வருமாறு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரியினால் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். எனினும், நேற்றைய தினமும் சமுகமளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில் தமது கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை, விபரங்களை வழங்கவில்லை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து அரச அலுவலருக்கு கட்டளை வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் அரியாலைப் பொதுச் சுகாதாரப்பரிசோதகரினால் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இந்நிலையில் மேற்படி விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்று நாட்டின் நடைமுறையில் உள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளின்கீழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவரினால் கோரப்படும் விபரங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கட்டளை வழங்கியுள்ளது. (ம-18)

### ஆப்கானில் தலிபான்கள் எழுச்சிபெற்றுள்ளதால்

# இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் வலுப்பெறும் - ஞானசார தேரர்


(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் மீண்டும் எழுச்சிபெற்றுள்ள தலிபான் அமைப்பினால் இலங்கையில் 70 வீதம் ஆதிக்கம் பெற்றுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் வலுப்பெறும். தப்லிக் ஜமாத் அமைப்பை அரசாங்கம் தடை செய்வதுடன், இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையுடைய அமைப்புக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் முற்றாக இல்லாமல் போயுள்ளது என்று ஒருபோதும் கருதகூடாது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அரசாங்கம் ஆப்கானிஸ்தான் விவகாரத்தை கருத்திற் கொண்டு இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றார். (ம)

# சத்திய தரிசனம்



## பிரமாண்ட லிங்கம்

- நீ வெளிச்சத்தை நோக்கி நகர்ந்தால் நிழல் பின்னால் விழும். வெளிச்சத்துக்கு எதிராக நகர்ந்தால் நீ நிழலைப் பின்பற்ற வேண்டியதாகும்.
- ஒவ்வொரு கணமும் பகவானை நோக்கி அடியெடுத்து வை. அப்போது மாயையென்னும் நிழல் (அஞ்ஞானம்) பின்னே சரியும், உன்னை மயக்காது.
- உறுதியாக இரு, திடசங்கல்பத்தோடு இரு, தவறு செய்யாதே, தப்பான அடி எடுத்து வைத்துவிட்டுப் பின்னர் வருந்தாதே!
- முதலில் தாபம் (சிந்தனை, முடிவு, கட்டுப்பாடு) இருக்கட்டும். அது பச்சாதாபத்தை விட (கழிவிரக்கம்) உயர்ந்தது.
- அர்ஜுனனுக்குத் தாபம் இருந்தது. அவன் போர் தொடங்குவதற்கு முன்னரே அதன் விளைவைப் பற்றிச் சிந்தித்து கிருஷ்ணரின் அறிவுரையை நாடினான்.
- பாண்டவருள் மூத்தவரான தர்மரோ போர் நடந்து முடிந்தபின், இழப்புக்குப் பின்னர் பச்சாதாபம் கொண்டார். காரணத்தை யோசி, பகுத்தறி.

(தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

24

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அட்டவணை 10D

வட மேல் மாகாண சபைத் தேர்தல் -2004

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | SLMC | மொத்தம் |
| குருநாகல் | 20 | 12 | 2 | 34 |
| புத்தளம் | 9 | 7 | - | 16 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 31 | 19 | 2 | 52 |

அட்டவணை 10E

வட மத்திய மாகாண சபைத் தேர்தல் -2004

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | SLMC | மொத்தம் |
| அநுராதபுரம் | 14 | 6 | 1 | 21 |
| பொலன்னறுவை | 6 | 4 | - | 10 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 22 | 10 | 1 | 33 |

அட்டவணை 10F

ஊவா மாகாண சபைத் தேர்தல் -2004

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | மமமு | மொத்தம் |
| பதுளை | 12 | 8 | 1 | 21 |
| மொனராகலை | 7 | 4 | - | 11 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 21 | 12 | 1 | 34 |

அட்டவணை 10G

சபரகமுவ மாகாண சபைத் தேர்தல் -2004

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | இதோக | மொத்தம் |
| இரத்தினபுரி | 15 | 8 | 1 | 24 |
| கேகாலை | 11 | 7 | - | 18 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 28 | 15 | 1 | 44 |

## வடக்கு- கிழக்கு மாகாணங்கள் பிரிப்பு -2007

பதின்மூன்றாம் அரசியலமைப்பு திருத்தத்திற்கிணங்க ஸ்தாபிக்கப்பட்ட மாகாண சபைகளில் இரண்டு மாகாண சபைகளான வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இரண்டும் ஒருங்கிணைக்கப்படுவதற்கான அறிவித்தல் 1988. 09.08 ஆம் திகதிய 522/9 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அம் மாகாண சபைகளுக்காக நடத்தப்பட வேண்டிய மக்கள் விருப்பங்கோடல் கடந்த காலங்களில் அடிக்கடி ஒத்தி வைக்கப்பட்டது.

ஒருங்கிணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான சபை சார்பாக 1988 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சபை 1990 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது.

அச் சபைக்கான வாக்கெடுப்புத் தொடர்பாக 1990.07.11 ஆம் திகதிய 618/10 ஆம் இலக்க அரசாங்க வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித் தல் 1990.07.12 ஆம் திகதிய 618/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை மூலம் வறிதாக்கப்பட்டது.

இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாக அலகாக அங்கீகரிக்கப்பட்டமை, அம் மாகாண சபை சார்பாக வாக்கெடுப்புக்கான வேட்புமனுக்கோரல் மேற்கொள்ளப்படாமை ஆகிய விடயங்கள் காரணமாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவெனத் தெரிவித்து கந்தளாயைச் சேர்ந்த எம். ஜயந்த வீரசேகர, சம்மாந் துறையைச் சேர்ந்த ஜனாப் ஏ. எஸ். மொஹமட் புஹாரி உஹனையைச் சேர்ந்த ஏ.ஜீ.வசந்த ஜயதிஸ்ஸ ஆகியோரினால் உயர்நீதிமன்றத்தில் முறையே 243/2006, 244/ 2006, 245/ 2006 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவ் வழக்கு விசாரணையை அடுத்து அன்றைய அரசுத் தலைவர் ஜெயவர்தனவினால் அறிவிக்கப்பட்ட இணைப்பு சட்ட விரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்டோபர் 16 இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடுத்து, 2007 ஜனவரி1 இல் வடக்கு- கிழக்கு மாகாணசபை, வட மாகாண சபை, கிழக்கு மாகாண சபை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இம் மனுக்கள் தொடர்பான வழக்குத் தீர்ப்பின் விபரத்தை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

**வடக்கு- கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்டோபர் 16 இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடுத்து, 2007 ஜனவரி 1 இல் வடக்கு- கிழக்கு மாகாண சபை வட மாகாண சபை, கிழக்கு மாகாண சபை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.**

பாராளுமன்றமானது சட்டத்தின் மூலம் அடுத்துள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை தனியொரு முதலமைச்சரைக் கொண்ட தனியொரு மாகாண சபையாக இணைக்கலாம் என்பதை பதின் மூன்றாவது திருத்தமானது அரசியலமைப்பில் நிரந்தரமானதாக சேர்த்துள்ளது.

வடக்கு- கிழக்கு இணைப்பைப் பிரிக்கும் வகையில் உயர் நீதிமன்றத்தால் 2006 இல் வழங்கப்பட்ட தீர்ப்பானது வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டிருந்த மாகாண சபைகள் சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்கு மாறாக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கு இணைப்பை நீடித்துச் சென்றமையானது அரசியலமைப்பிற்கு மாறானது என்பதாக மட்டுமே இருந்தது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைப்பது அரசியலமைப்பிற்கு மாறானது என்பதாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருக்கவில்லை.

அடுத்துள்ள மாகாணங்களை ஒரே மாகாணசபையாக இணைப்பது என்பது இன்னமும் அரசியலமைப்பின் பாகமாகவே இருந்து வருகின்றது.

வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டிய அவசியமோ அல்லது சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்ல வேண்டிய அவசியமோ இல்லை.

பாராளுமன்றமானது சாதாரண பெரும்பான்மை மூலம் இருந்து வரும் மாகாண சபைகள் சட்டத்தை திருத்துவதன் மூலம் அல்லது புதிதாக ஒரு சட்டத்தை ஆக்குவதன் மூலம் இதனைச் செய்யலாம் என்பதே சட்டவல்லுநர்களின் கருத்தாகும்.

## மாகாணசபைத் தேர்தல்கள் 2008-2009

கிழக்கு மாகாணத்தின் முதலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் 2008 மே 10 ஆம் திகதி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து வடக்கு மாகாணம் தவிர்ந்த மற்றைய 7 மாகாணங்களுக்கான ஐந்தாவது மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றன.

2008 ஓகஸ்ட் 23 ஆம் திகதி வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. 2009 பெப்ரவரி14 ஆம் திகதி மத்திய மாகாண சபைக்கும் வட மேற்கு மாகாண சபைக்குமான தேர்தல்களும் ஏப்ரல் 24 ஆம் திகதி மேல் மாகாண சபைக்கான தேர்தல்களும் நடை பெற்றன.

2009 ஓகஸ்ட் மாதத்தில் ஊவா மாகாண சபைக்கான தேர்தல்களும், 2009 ஒக்டோபரில் தென் மாகாணசபைக்கான தேர்தலும் நடைபெற்றன.

(தொடரும்...)

# 215 பேர் பலி...

களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9,400 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 100 பெண்களும் 115 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# +3,828...

உறுதிசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை மொத்தமாக 444,130 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,060 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 376,216 ஆக அதிகரித்துள்ளது. (ம)

# மோ.சைக்கிள்...

நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று அதே திசையில் பயணித்துக் கொண்டிருந்த பிறிதொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் இரு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 49 வயதுடைய முள்ளியவெளி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

புளியங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

# மாந்தை கிழக்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா விவேகானந்தராசா (வயது-43) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த சம்பவம் கொலையா? தற்கொலையா? என்றகோணத்தில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60,315)

# நயினை தாயின்...

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூசணிஅம்மன்கோவில் வருடாந்த மகோற்சவம் ஜூன் 10ஆம் திகதியன்று இடம்பெறவிருந்த நிலையில், கொரோனா அச்சம் காரணமாக செப்ரெம்பர் 06ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தற்போதும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துச் செல்வதால், முன்னர் ஒத்திவைக்கப்பட்டதைப் போன்று இம்மாதம் 06ஆம் திகதியன்று மகோற்சவத்தை நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக நயினாதீவு கோவில் அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

எனவே, இந்த வருட மகோற்சவம், கொரோனா வைரஸ் அதிகரித்துச் செல்வதால் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-18)

# மருதனார்மடச்...

பதற்றநிலை காணப்பட்டது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்பாக பழக்கடை நடத்துபவர் மீதே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கழுத்து, காலில் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட கும்பலே ஊரடங்கு வேளையில் தாக்குதலை நடத்தியுள்ளது. (ம-33,104)

# யாழ். குடாநாட்டில்...

வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவர் கோவிட் - 19 தொற்றுடன் குழந்தையை பிரசவித்து 10 நாட்களின் பின்னர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த கொக்குவிலைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவரும் இருபாலையைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவரும் கொக்குவிலைச் சேர்ந்த 75 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 41 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மேலும் பருத்தித்துறையைச் சேர்ந்த 91 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

உடுவிலில் 74 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் - 19 நோய்த்தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவரது சடலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் வரும் ஞாயிற்றுக்கிழமை மின் தகனம் செய்யப்படும் என்று உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-18,33)

# யாழ்.மாவட்டத்...

பிசிஆர் சோதனைகளில் 51 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 85 பேரும் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 48 பேரும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேரும் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 19 பேரும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 41 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காரைநகரில் 9 பேரும் நல்லூரில் 14 பேரும் சண்டிலிப்பாயில் 8 பேரும் உடுவிலில் 11 பேரும் தெல்லிப்பளையில் 2 பேரும் வேலணை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் 7 பேரும் பருத்தித்துறையில் 28 பேரும் மருதங்கேணியில் 4 பேரும் ஊர்காவற்றுறையில் ஒருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 9 பேரும் (யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உயிரிழந்த 81 வயதானவருக்கும் தொற்று உறுதியானது) தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 5 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 2 பேரும் கோப்பாய் மாவட்ட வைத்தியசாலையில் 8 பேரும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 2 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-33)

# கோவிட் தொற்...

பெற்றுவந்த வவுனியாவின் போகஸ்வேவ, நம்பவெட்டி, தோணிக்கல், கூமைப்பிள்ளையார்குளம், இளமருதங்குளம் ஆகியபகுதிகளைச்சேர்ந்தமுறையே 60, 54, 71, 72, 58 ஆகிய வயதுகளையுடைய 5 பேர் நேற்று மரணமடைந்துள்ளனர்.

இந்நிலையில் மரணித்த 5 பேரினதும் உடல்களை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா செட்டிகுளம் பகுதியில் 25 வயது இளைஞன் ஒருவரும் கொரோனாவால் நேற்று முன்தினம் இரவு மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வவுனியாவில் 237 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 237 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-250,299)

# இலங்கைக்குள்...

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தென்னாபிரிக்காவில் தற்போது இனங்காணப்பட்டுள்ள புதிய பிறழ்வு இலங்கையில் பரவியுள்ளதா? என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும் உலகளாவியரீதியில் மக்கள் அங்கும் இங்கும் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புதிய பிறழ்வு நாட்டுக்குள் நுழையக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே அதற்கும் தயாராகிக்கொண்டே தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

டெல்டா தொற்று இனங்காணப்பட முன்னர் நாம் தயாராகியதைப் போலவே, இதனை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளும் தயார் நிலையிலுள்ளன.

எந்த வைரஸ் பிறழ்வு இனங்காணப்பட்டாலும் சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவது அத்தியாவசியமானதாகும் என்றார். (ம)

# எந்தவொரு...

வியரீதியில் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

"மூ" என அழைக்கப்படும் இந்த கோவிட் திரிபு, கடந்த ஜனவரி மாதம் கொலம்பியாவில் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கோவிட் திரிபை இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எந்தவொரு தடுப்பூசியினாலும் கட்டுப்படுத்த முடியாது எனவும் இது மிக விரைவில் பரவக் கூடியது எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

முறையாக சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பதன்மூலம் இந்தத் தொற்று பரவுவதை தடுக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

*(இது தொடர்புடைய மேலும் ஒரு செய்தி உள்ளே)*

# பொருளாதாரம்...

மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காணொளி இணைப்பு மூலமாக இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இந்தத் தகவலை சீனாவின் சின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் காங்கிரஸ் (NPC) நிலைக் குழுவின் தலைவரான லி, இரு நாடுகளின் தலைவர்கள் எட்டியுள்ள முக்கிய ஒருமித்த கருத்தை அமுல்படுத்துவதற்கும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் சீனா இலங்கையுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

அரசியல் பரிமாற்றங்களை மேம்படுத்தவும் கோவிட் - 19 ஒழிப்புக்கான ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும் பலதரப்பு ஒருங்கிணைப்புக்கு ஒத்துழைக்கவும் இதன்போது அவர் அழைப்பு விடுத்தார்.

சந்திப்பின்போது லி, சீனாவின் கோட்பாடுகள் மற்றும் கோவிட் -19 தோற்றம் குறித்த நிலைப்பாட்டையும் சபாநாயகர் மகிந்தயாப்பா அபேவர்த்தனவுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

கோவிட் -19 இன் தோற்றத்தைக் கண்டறிவது ஒரு சிக்கலான அறிவியல் விடயம் என்றும் இது கூட்டு ஆராய்ச்சிமூலம் உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகளால் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும்.

தொற்றுநோய்க்கு எதிரான ஒத்துழைப்புக்கான அறிவியல் சூழல் மற்றும் தோற்றத்தின் தீவிரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் மற்றும் ஒரு சிறந்த சூழ்நிலையை பராமரிப்பதற்கும் சீனா இலங்கையுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளது என்றும் லி தெரிவித்தார்.

இதன்போது சபாநாயகர் இறையாண்மையைப் பாதுகாக்கவும் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கவும் கோவிட் -19க்கு எதிரான போராட்டத்தில் இலங்கையின் முயற்சிகளுக்கு உறுதியான ஆதரவளிப்புக்காக சீனாவுக்கு நன்றி தெரிவித்தார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவுள்ளதாக அரசு அறிவிப்பு

## நீதியமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது எனக் கேட்டு பல வருடங்களாக தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், காணாமல் போனவர்களுக்கு இழப்பீட்டை வழங்கவுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒருவர் எத்தகைய சூழலில் காணாமல்போனார் என்பதைப் பார்க்காது, காணாமற்போனோரை அடையாளம் கண்டு இழப்பீட்டை வழங்கவுள்ளதாக நீதியமைச்சர் அலிசப்ரிதெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பான விடயத்தை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகவும் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிவருவதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தை போலல்லாது காணாமல் போனோர் அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்பாக அரசாங்கம் கண்காணித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற்போனவர்கள் எந்த காரணத்திற்காக காணாமல்போனார்கள் என்பதைப்பற்றி விசாரிக்கத் தேவையில்லையென ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜை என்பதை மனதில் வைத்து, இவ்வாறான சம்பவம் மீண்டும் நிகழாமலிருப்பதை உறுத்திப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் கடந்தபோதிலும் இன்னும் காணாமல்போனவர்கள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் இருப்பது, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணமென நீதியமைச்சர் அலிசப்ரி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த 29,900 மெட்ரிக் தொன் சீனி மீட்பு

## நுகர்வோருக்கு விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

களஞ்சியசாலைக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட 29,900 மெட்ரிக் தொன் சீனி, நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவை அரசுடமையாக்கப்பட்டதாக அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல தெரிவித்தார்.

இந்தச் சீனித்தொகை கட்டுப்பாட்டு விலையில் அரச மற்றும் தனியார் வர்த்தக நிலையங்களின் ஊடாக நுகர்வோர் பொதுமக்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வருடாந்தச் சீனித்தேவைக்கு மேலதிகமாகச் சீனி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டுக்குள் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதான மாயையை உருவாக்கி நுகர்வோரைச் சிரமத்துக்கு உட்படுத்தி அதிகவிலைக்கு சீனியை விநியோகிக்கும் முயற்சியொன்று கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் சீனியைக் கண்டுபிடிப்பதற்காக முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது கண்டறியப்படும் சீனித்தொகையை கட்டுப்பாட்டு விலையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ம)

# அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை

(கொழும்பு)

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் அவசரமாக மருந்து கொள்வனவு செய்யப்பட்டதால் அரசுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சிலர் தெரிவிக்கும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# அரசின் தன்னிச்சையான செயலால் மக்கள் உயிரிழப்பு

## சஜித் அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசு தன்னிச்சையான முறையில் செயற்படுகின்றமையின் விளைவாக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலின் சவாலை அப்பாவி நாட்டு மக்களே எதிர்கொண்டு வருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எமது நாட்டில் கொரோனாத் தொற்றின் காரணமாக உயிரிழப்பவர்களின் வீதம் அதிகரித்த மட்டத்தில் உள்ளது.

இது கவலைக்குரிய விடயமாகும். இது சிறந்த விடயமல்ல. ஏனெனில் உலக நாடுகளில் எமது நாடு முதலிடத்துக்கு வந்துள்ளது.

தெற்காசியாவின் ஏனைய நாடுகளான இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளின் மரண வீதம் பூச்சியமாகும் போது எமது நாட்டில் இறப்புவீதம் 8 ஆக உயர்வடைந்துள்ளது.

தெற்காசியாவில் எங்கும் இல்லாத வகையில் சிறந்த சுகாதாரக் கட்டமைப்பே எமது நாட்டில் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் உலக சுகாதார ஸ்தாபனம் கூட எமது நாட்டின் சுகாதாரத்துறையைப் பாராட்டியது. அத்தகைய சுகாதாரசேவையையே இந்நிலைக்கு கொண்டு வந்துள்ளனர் என்றார். (ம)


English Classes
zoom மூலம்
Gr. 5 to O/L
பிரத்தியேக வகுப்புகள்
(7846)
077 331 4608


# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
14 – 03 – 1941



ஆண்டவன் திருவடியில்
31 – 08 – 2021

## திரு. பொன்னையா குகதாசன்

**( Rtd. Senior Tax Officer )**

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையினை வதிவிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா குகதாசன் நேற்று முன்தினம் (31.08.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னபூரணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தையா - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் புவனலட்சுமியின் அன்புக் கணவரும் பாமினி (WKK Engineering Company Pvt. Ltd), ரொமேஷன் (Commercial Bank, Point Pedro) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமேஷ்குமார் (Astal Engineering, Brunei), பிரபாகரி ஆகியோரின் அன்பு மாமனாரும் புனிதராணி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற புவனராணி, குலதாசன் (ஜேர்மனி), குணதாசன் (கனடா), புஸ்பராணி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசரத்தினம் (யாழ்ப்பாணம்), குலசிங்கம் (கனடா), மீனாம்பிகை (ஜேர்மனி), திலகவதி (கனடா), சண்முகதாஸ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆரணி, ஆத்விக், அக்ஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (01.09.2021) புதன்கிழமை Jawatta பொது மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

Skyline, No.24, Daya Road, Colombo - 06.
No. 40, Champion Lane, Kokuvil.
077 130 4642
077 355 3001
தகவல்:-
குடும்பத்தினர்


German, Holland(Netherland), Swiss, Ostria
நாடுகளுக்கான மொழி வகுப்புக்கள் German Embassy இன்
A1 Certificate இற்கு ஏற்றவாறு
நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு : Mrs.P.Kajenthini
077 160 4823
Jaffna
(7839)

காணி விற்பனைக்கு



நீர்வேலி தெற்கு. கரந்தன் பகுதியில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு - 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
( தரகர் தேவையில்லை )
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(7845)
077 814 7389
077 614 7333


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.